# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**Vol. III** **Issue 10** **January 2014**

இம்மாத மலரில். . .

## பொருளடக்கம்

பக்கம்

லைப் டிவைன் . . . . . . . . . . . . . 2
இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . 12
சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . 13
யோக வாழ்க்கை விளக்கம் . . . . . 15
நெஞ்சுக்குரிய நினைவுகள் . . . . . 17
அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . 19
அன்பர் அனுபவம் . . . . . . . . . . . 23
பூரணயோகம் - முதல் வாயில்கள் 25
அஜெண்டா . . . . . . . . . . . . . . . 27
பிரார்த்தனையின் கட்டங்கள் . . . . 29
சூட்சும விஷயங்கள் ஜட விஷயங்களைவிட சக்தி வாய்ந்தவை. . . . . . . . . . . . . . . 34
அன்னை இலக்கியம் . . . . . . . . . 49

**ஜீவியத்தின் ஓசை**

அறிவும்
சிந்தனையும்
ஜடத்தின்
ஞானமும்
தன்மையுமாகும்

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

ஸ்ரீ அரவிந்தம்

## லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

## XXVI. The Ascending Series of Substance

Page 257
Para 8

So too with the high gradations.
There is something next in the series.
It must be governed by Mind,
Mind has a dominating and determining factor.
That factor should govern.
Substance there must be subtle,
It must be flexible enough,
Mind imposes shapes on it,
It must be able to assume the shapes.
Thus it obeys its operations.
Self-fulfilment is demanded,
Self-expression is asked for,
It must subordinate itself to them.
There is a relation between the sense and substance,
It must have a corresponding subtlety,
There is a flexibility.
It must be determined.
It is not to be done by the physical organs,
It is with the physical object,
But it is of Mind with the subtler substance.
It works on that.
Such a world has a life.



## 26. உயரும் பொருளின் அடுக்குகள்

உயர்ந்த அடுக்குகளும் அது போன்றதே.
அடுக்கில் அடுத்த நிலையுண்டு.
இது மனத்தால் ஆளப்பட வேண்டும்,
மனம் ஆளும், நிர்ணயிக்கும்.
அந்த அம்சம் ஆள வேண்டும்.
பொருள் அங்கு சூட்சுமமாக இருக்க வேண்டும்,
போதுமான அளவு மிருதுவாக இருக்க வேண்டும்,
மனம் அதன்மீது ரூபங்களைத் திணிக்கிறது,
அந்த ரூபங்களை அவை ஏற்க வேண்டும்.
அவ்வேலைகளை இவ்விதம் அவை ஏற்கின்றன.
சுய பூர்த்தி அவசியம்,
சுய-வெளிப்பாடு அவசியம்,
இவற்றிற்கு அது தன்னை உட்படுத்திக் கொள்ள வேண்டும்.
பொருளுக்கும் புலனுக்கும் தொடர்புண்டு,
இதற்குரிய சூட்சுமம் உண்டு,
அதற்கு மிருதுத்தன்மையுண்டு.
அதை நிர்ணயிக்க வேண்டும்.
அவை உடலுறுப்பால் நிர்ணயிக்கப்படுவதில்லை,
ஜடப்பொருளின் தொடர்பு அது,
மனம் சூட்சுமப் பொருளுடன் கொண்ட தொடர்பு அது.
அங்கு மனம் செயல்படுகிறது.
அவ்வுலகுக்கு ஜீவனுண்டு.

It would be a servant of Mind,
Our mental operations are weak and limited,
Our vital faculties are coarse and rebellious,
They can have no adequate conception,
There Mind dominates,
It is as the original formula.
Its purpose prevails.
Its demands override all others in law.
It is the law of the divine manifestation.
At a higher reach there is Supermind.
Or, intermediately principles touched by it.
Still higher there is a pure Bliss,
There is a pure conscious Power.
Or a pure Being replaces Mind.
Mind is replaced as a dominant principle.
We enter into the ranges of cosmic existence.
To the old Vedic seers they were worlds of illumined existence.
They termed them as foundations of Immortality.
Later Indian religion called it Brahmaloka or Goloka.

It is some supreme self-expression of Being as Spirit.
It has its highest perfection.
The soul is liberated into it.
The soul possesses beatitude and infinity of the eternal Godhead.

Page 257
Para 9

This is a continually ascending experience and vision.
This is uplifted beyond the material formulations.
The above is the principle that underlies this.



அது மனத்தின் சேவகன்,
நம் மனத்தின் செயல்கள் திறனற்றவை, அளவுள்ளவை,
நம் வாழ்வின் திறன் இருண்டது, புரட்சி செய்வது,
அவற்றால் போதுமான அளவு புரிந்து கொள்ள முடியாது,
அங்கு மனம் ஆட்சி செலுத்துகிறது,
அது மூல சூத்திரம்.
அதன் நோக்கம் நிறைவேறும்.
சட்டத்தில் அதன் அதிகாரம் செல்லும்.
தெய்வீக சிருஷ்டியின் சட்டம் அது.
உயர்ந்த நிலையில் சத்திய ஜீவியம் உண்டு.
இடையில் அதன் சட்டத்தின் சாயல் உண்டு.
அடுத்த உயர்ந்த நிலையில் தூய ஆனந்தமுண்டு,
தூய்மையான விழிப்பான பவருண்டு.
தூய்மையான ஜீவன் மனத்தை விலக்கும்.
மனம் ஆளும் சக்தியாவதினின்று விலக்கப்படும்.
பிரபஞ்ச வாழ்வின் வீச்சினுள் நாம் நுழைகிறோம்.
வேதரிஷிகட்கு அவ்வுலகங்கள் ஒளி பொருந்திய வாழ்வாகும்.

அமரத்துவ அடிப்படை என அவற்றை விவரித்தனர்.
பிற்காலத்தில் இந்தியர் அதைப் பிரம்மலோகம்
என்றழைத்தனர். கோலோகம் எனவும் கூறினர்.
ஜீவன், ஆத்மாவாக உச்சகட்ட உருவம் கொள்வதது.
அதற்கு உச்சகட்ட சிறப்புண்டு.
ஆத்மா அதனுள் விடுதலை பெறுகிறது.
சாஸ்வதமான இறைவனில் ஆத்மா அனந்தத்தையும்,
ஆனந்தத்தையும் பெறுகிறது.

தொடர்ந்து உயரும் அனுபவ திருஷ்டியாகும் இது.
ஜடத்தின் உருவகங்களைக் கடந்த நிலையது.
மேற்கூறியவற்றிற்கு அடிப்படையான தத்துவம் இது.

All cosmic existence is a complex harmony.
It does not finish with the limited range of consciousness.
Mind and life are imprisoned in them.
They are ordinary life and Mind.
Being, consciousness, force, substance descend and ascend.

It is a many-runged ladder.
On each step of which being has a vaster extension.
Consciousness has a wider sense.
It is of its own range and largeness and joy.
Force get a greater intensity.
It gets a more rapid and blissful capacity.
Substance gives a more subtle rendering of its primal reality.
It is a flexible, buoyant, and plastic rendering.

For the more subtle is more powerful.
One might say, the more truly concrete.
It is less bound than gross.
It has a greater permanence in its being.
It is along with a greater potentiality.
It has plasticity and a range in its becoming.
Our experiences widen.
Each plateau of the hill of being gives a higher plane of consciousness.
It is a richer world for our existence.



பிரபஞ்ச வாழ்வு சிக்கல் நிறைந்த சிறந்த சுமுகம்.
ஜீவியத்தின் அளவுள்ள வீச்சிற்குள் அடங்கியதில்லை இது.
மனமும், வாழ்வும் அதனுள் சிறைப்பட்டன.
அவை எளிய மனமும், வாழ்வுமாகும்.
ஜீவன், ஜீவியம், சக்தி, பொருள் உயரவும், தாழவும் செய்கின்றன.
பல படிகளுள்ள ஏணி அது.
ஒவ்வொரு படியிலும் ஜீவனுக்குப் பரந்த விரிவுண்டு.
ஜீவியம் பரந்த உணர்வு பெறும்.
அது பரந்த வீச்சுள்ளது, சந்தோஷம், வளர்ச்சியுள்ளது.
சக்திக்கு அதிக தீவிரம் வருகிறது.
அதற்கு தீவிர ஆனந்தமான திறன் வருகிறது.
பொருள் அடிப்படை சத்தியத்தைச் சூட்சுமமாக வெளியிடுகிறது.
அது விளையும் தன்மையும், மிருதுவான சக்தியுடையது-மாகும்.
சூட்சுமம் அதிகமானால், பவர் அதிகமாகும்.
உண்மையான வலிமை அதிகமாவதாகக் கூறலாம்.
ஜடத்தைவிட குறைந்த அளவு கட்டுப்பட்டது எனலாம்.
அதன் ஜீவனுக்கு அதிகமாக சாஸ்வதமுண்டு.
மேலும் அதனுள் அதிக திறன் வித்தாக நிறைந்துள்ளது.
அது மாறும் திறனுடையது, சிருஷ்டியில் அதிக வீச்சுள்ளது.
நம் அனுபவம் பரந்து வளர்கிறது.
ஜீவன் உயர்ந்த மலையானால், உயர்ந்த ஜீவியம் எழும்.

நம் வாழ்விற்கு அது சிறந்த உலகமாகும்.

Page 258
Para 10

Ours is material existence,
It has possibilities.
How does this ascending series affect it?
If each plane is cut off entirely from that precedes that,

It would not affect them at all.
There are planes of consciousness,
There are world of existence,
There are grades of substance,
There are degree of cosmic force,
They precede and follow our world.
But the opposite is the truth.
The manifestation of the Spirit is a complex weft.
One principle is designed and patterned.
In it all the principles enter.
They enter as elements of the spiritual whole.
Ours is a material world.
It is the result of all the others.
For the other principles have all descended into Matter.

The physical universe is thus created.
There are particles in what we call Matter.
They contain all of them implicit in itself,
They have a secret action,
We have seen it,
It is involved in every moment of its existence.



நம் வாழ்வு ஜட வாழ்வு,
அதற்கு வாய்ப்புண்டு.
இந்த உயரும் அடுக்குகள் எப்படி அதைப் பாதிக்கும்?
ஒவ்வொரு லோகமும் அதற்கு முந்தைய லோகத்தினின்று
முழுவதும் பிரிக்கப்பட்டிருந்தால்,
அவை பாதிக்கவே படாது.
ஜீவிய லோகங்களுண்டு,
வாழ்வுக்குரிய லோகங்களுண்டு,
பொருளின் தர வேறுபாட்டு லோகங்களுண்டு,
பிரபஞ்ச சக்தியின் தரத்திற்குரிய லோகங்களுண்டு,
அவை நம் உலகுக்கு முன்னும், பின்னும் உள்ளன.
ஆனால் எதிரானது உண்மை.
ஆன்மீக வெளிப்பாடு ஒரு சிக்கல் போன்று சிறந்த கூடு.
ஒரு தத்துவத்தை திட்டமிட்டு முறையாக வெளியிடுகிறோம்.
ஒரு சட்டத்தில் எல்லாத் தத்துவங்களும் வரும்.
ஆன்மீக முழுமையின் பகுதிகளாக அவை வரும்.
நாம் வாழ்வது ஜட லோகம்.
எல்லா லோகங்களின் பலனாக நம் லோகமுள்ளது.
மற்ற எல்லாத் தத்துவங்களும் ஜட உலகில் வந்து
செயல்படுகின்றன.
ஜட உலகம் அப்படி ஏற்பட்டதே.
நாம் ஜடமென்பதில் பல துணுக்குகள் உண்டு,
தன்னுள் அனைத்தையும் உட்கொண்டுள்ளன,
அவற்றிற்கு இரகஸ்யமான செயலுண்டு,
நாம் அதைக் கண்டோம்,
ஒவ்வொரு கண வாழ்விலும் அவை கலந்துள்ளன.

An in every movement of its activity.
It is Matter.
It is the last word of the descent.
It is also the first word of ascent.
There are planes, worlds, grades, degrees.
They are all involved in the material existence.
So they are all capable of evolution out of it.
Material being does not begin and end with gas, etc.

It does not end with gases, chemical compounds, physical forces, movements and suns and earths.
But it evolves life, evolves mind, must evolve Supermind and higher degrees of the spiritual existence.
Evolution comes by the unceasing pressure of the supra-material planes.
It compels the material compelling it to deliver out of itself.

It compels to deliver principles and powers.
They might have conceivably slept imprisoned.
It is imprisoned rigidly in the material formula.
This would even have been improbable.
Their presence there implies a purpose of deliverance.
Still this is necessary from below.
It is actually aided by the kindred superior pressure.

Contd...



ஒவ்வொரு செயலின் சலனத்திலும் அது உள்ளது.
இது ஜடம்.
சிருஷ்டியின் முடிவு ஜடம்.
பரிணாமத்தின் முதற்கட்டமும் ஜடமாகும்.
லோகம், அடுக்கு, நிலை உள்ளன.
அவை அனைத்தும் ஜட வாழ்வில் கலந்துள்ளன.
அவை அவற்றுள்ளிருந்து பரிணாமத்தால் வெளிவரும்.
ஜடமான ஜீவன் வாயுவில் ஆரம்பித்து வாயுவில் முடிவதில்லை.
வாயு, ரசாயனப் பொருள், ஜடசக்தி, சலனம், சூரியன், பூமியுடன் ஜட ஜீவன் முடிவதில்லை.
வாழ்வு, மனம், சத்திய ஜீவியம், ஆன்மீக வாழ்வின் உயர்ந்த நிலைகள் பரிணாமத்தால் வெளிவர வேண்டும்.
ஜடத்தைக் கடந்த லோகங்களின் இடைவிடாத அழுத்தத்தால் பரிணாமம் எழுகிறது.
அது ஜட உலகை தன்னுள்ளேயிருந்து வெளிப்படுத்தும்படி கட்டாயப்படுத்துகிறது.
தத்துவம், பவர் அப்படி வெளிப்பட வேண்டும்.
அவை சிறைப்பட்டு தூங்கியிருக்கலாம்.
ஜட தத்துவத்துள் அது இறுகி சிறைப்பட்டிருக்கலாம்.
இதுவும் நடக்க முடியாததாக இருந்திருக்கலாம்.
விடுதலைக்காக அவை சிறைப்பட்டிருக்கலாம்.
இவை கீழிருந்து அவசியமாகிறது.
இதுபோன்ற உயர்ந்த அழுத்த சக்தியால் அது உதவி பெறுகிறது.

தொடரும்...

## இம்மாதச் செய்தி

# கழிவு உடல் நலம்
# காப்பது போல்,
# ஊழல் ஊர் நலம் காக்கும்





## Page 158: Of the heart's love and the soul's witness gaze
### இதயத்தின் அன்பும், ஆத்மாவின் சாட்சிப் பார்வையும்

- ✡ உலகமறியாத இறைவனின் கரம் உந்துவதால் பீறிட்டெழும்
- ✡ பெரும் புரட்சியின் சிறு துகள்கள்
- ✡ மறைந்த மகத்துவத்தை தெறிக்கும் மின்னலாகக் காட்டி
- ✡ ஐயமான வித்து, வெளிவரும் உருவத்தின் சக்தி
- ✡ ஜடம் இருளில் மயக்கமுற்று அதனின்று விழித்தது
- ✡ சிருஷ்டியில் விலங்கு ஊர்ந்தெழுந்து ஓடிற்று
- ✡ பூமிக்கும் வானுக்குமிடையே பறந்தது, குரலெழுப்பியது
- ✡ காலன் வேட்டையின் இரை, வாழும் நம்பிக்கையைப் பற்றியது
- ✡ கணப்பொழுதானாலும், நிம்மதியாக மூச்சுவிட மகிழ்ந்து மலர்ந்தது
- ✡ முரட்டு மிருகம் முழுமனிதனை உருவாக்கியது
- ✡ வளம் பெறும் வாழ்வின் வண்ணத்தை உயர்த்த மனத்தில் சிந்தனையெழுந்தது
- ✡ கூரான இயற்கைக் கருவி கலந்து மழுங்கியது
- ✡ யந்திரம் போலும், சாட்சி போலும் செயல்பட்ட புத்தி
- ✡ உலகின் செயலை உய்விக்கும் ஆசானாக
- ✡ வலுப்பெற்ற நோக்கம், போக்கை எழுதும் பழக்கம்
- ✡ நிலையற்ற சக்தியில் நிலையான சட்டத்தைப் பதித்தது
- ✡ நுட்பமான மெஷினின் இரகஸ்ய சக்தியான ஸ்பிரிங்
- ✡ கருவியைக் கருவால் கனக்கும் பாணியின் மென்மை

✡ ஒளிந்த உள்ளுறை சக்தியை எழுந்து திருஷ்டியாக மாற்றி

✡ தன்னை மறந்த தச்சனின் அர்த்தமற்ற ஆரம்பம்

✡ கண்களை நிமிர்த்தினான், சொர்க்க ஜோதி திருமுகத்தைக் காட்டியது

✡ ஆன்மீகப் புதிரான உறக்கத்தைக் கண்டு அதிசயப்பட்டு

✡ அவள் சிருஷ்டியை அவளே கண்ணுற்றாள்

✡ இயல்பாக இயங்கும் இயந்திரத்தைக் கண்டு வியந்து

✡ நின்று நிதானித்துத் தன்னையும், தன் இலட்சியத்தையும் காண முயன்றாள்

✡ ஆழ்ந்த யோசனை அவனியை ஆளும் எண்ணத்தை எழுப்பியது

✡ அவள் ஞான திருஷ்டி அவள் அன்ன நடையை நடத்தியது

✡ உறுதியால் சூழப்பட்ட உணர்வுக்கு எண்ணம் எல்லை

✡ அவள் கண்மூடிய வேகம் எண்ணத்தால் கதிரென எழுந்தது

✡ ஆயிரம் உந்துதலை ஆளும் அவள் அனிச்சைச் செயல்

✡ ஜட இருள் புரண்டு ஓடியதை அவள் கண்டாள்

✡ சிந்தனையற்ற நடையின் சிறப்பு புதிரெனப் பூத்தது

✡ பிரம்மத்தின் பிரமை அவள் பார்வையில் தெறித்தது

✡ ஆத்மா சிதைந்து உயிரோவியமாயிற்று

✡ ஜடம் செயல்படுவதை அவள் முறையான சட்டத்திற்குள்ளாக்கினாள்

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

உடலில் இளமையும் அறிவில் விவேகமும் சேர்ந்தது யோக வாழ்வு.



## யோக வாழ்க்கை விளக்கம்

### 22/5. சிக்கல் சிறந்து எளிமையின் மூலமாகும்

- மாவீரன் அலெக்ஸாண்டரைப் பற்றி ஒரு கதையுண்டு.
- அதே போன்று கொலம்பஸ் பற்றியும் ஒரு கதையுண்டு.
- எவராலும் அவிழ்க்க முடியாத முடிச்சை அலெக்ஸாண்டர் கத்தியால் வெட்டி அவிழ்த்தான்.
- முட்டையை நிற்க வைக்கப் பலரும் முயலும்பொழுது கொலம்பஸ் அடியை உடைத்து நிற்க வைத்தான் என்பவை கதைகள்.
- அது முறையல்ல என பகவான் **cutting Gordian knot** என்ற சொற்றொடரைப் பற்றி எழுதுகிறார்.
- முடிச்சு என்றிருந்தால் அதில் சிக்கல்கள் பல எழலாம். சிக்கல் எதுவானாலும், முடிச்சு எப்படி ஏற்பட்டிருந்தாலும் வந்த வழி போனால் வழி விடும்.
- சர்க்கார் என் மனையை அடாவடி விலைக்கு எடுத்துக் கொண்டது.
- கொடுத்த பணத்தை ஏமாற்றுகிறான்.
- உதவிக்குப் போனேன் உபத்திரவம் தருகிறான்.
- இந்த முதலாளி கட்டும் கோயிலுக்கு நான்கு கோடி முதல் ஐந்து கோடி வரை சேவையை நன்கொடையாகக் கொடுத்திருக்கிறேன். அவர் பாக்டரிக்கு இருபது லட்சம் பாக்கி என்றவுடன் சரக்கை நிறுத்திவிட்டார்.
- மனிதனுக்குப் பிறந்த நாள் விழா கொண்டாடப் போனேன். என் உயிருக்கு ஆபத்து வந்தது. அதைச் சொல்லி எச்சரிக்கையும் மனிதன் செய்யவில்லை.
- நாற்பத்தாறு வருஷம் ஒரு குடும்பத்தை என் தகப்பனாரும், அவருக்குப்பின் நானும் முழுவதும் காப்பாற்றினோம். என்னைப் பற்றி என் எதிரிகளிடம் குற்றம் சாட்டுகிறார்கள்.
- எவருக்கும் இல்லாத அனுபவங்களிவை.

- சொந்தமாக அனுபவித்தவரும் நம்ப முடியாத செய்திகள் இவை.
- இவற்றுள் உள்ளது சிக்கலில்லை. சிறப்பு.
- சிறப்பு வெளிப்படும் வழி, சிக்கலை அவிழ்க்க முடிவது அன்னை வழி.
- மனையை நல்ல முறையில் வாங்கியிருந்தால், க்ஷணத்தில் சர்க்கார் ஆர்டர் ரத்தாகும்.
- ஏமாற்றுவேன் என நினைத்தவன் வீடு வந்து பணம் தந்தான்.
- சரக்கை நிறுத்திய முதலாளிக்கும், அன்பனுக்கும் நிலை தலைகீழே மாறி, அன்பர் அவரைப் போல ஏழு மடங்கு பெரியவனாகி, செயல் தலைகீழே மாறியது.
- நாற்பத்தாறு வருஷம் உதவி பெற்றவர் முப்பது வருஷங்கட்கு முன் பெற்றதைத் திருப்பிக் கொடுக்க முன்வந்தார். அன்பர் பெற மறுத்தார்.
- இவர்கள் எல்லாம் சிக்கலைப் பொறுமையாக அவிழ்க்க முயன்று, முனையைக் கண்டுபிடித்து வெற்றி பெற்று

***சிக்கல் பெரும் சிறப்பு எனக் கண்டார்கள்.***

- வந்த வழி போவது பொறுமை தேவைப்படும் முறை.
- சாவித்திரியில் உஷைக்காலம் எமனை வெல்வதிலும், அவனை அழிப்பதிலும் முடிகிறது.
- முடிச்சு அவிழ்ந்தபின் எழும் எளிமை சிறப்பின் உயர்ந்த அம்சம்.
- எளிமையே உயர்ந்த சிறப்பு, சிக்கல் அதன் வாயில்.



# நெஞ்சுக்குரிய நினைவுகள்

## சமர்ப்பணம்

கர்மயோகி

சமர்ப்பணம் முழுமையாகச் செய்ய முடியவில்லை என்று அறிவது, சமர்ப்பணத்தின் முழுமையை அறிவது. சமர்ப்பணம் சூட்சுமமானது. நாம் வாழும் உலகம், அதன் நிகழ்ச்சிகள், நம் செயல்கள் ஜடமானவை, ஜீவனற்றவை. மனத்திலும் அறிவைவிட உணர்வு சூட்சுமமானது. விளக்கம் தேவைப்படுவது அறிவு. அந்த அளவில் அதற்கு சூட்சுமமில்லை. ஜடம் எனலாம். குறிப்பாய் உணர்வது சூட்சுமம். சூட்சுமம் மிகுதியாகி இரகஸ்ய-மானால் குறிப்பும் எழாது. குறிப்பும் தேவைப்படாது. சூழல் குறிப்பதையும் தவிர்க்கும். குறிப்பை குறிப்பாக விலக்கும் சூழலில் குறிப்பையும், அதனால் உணர வேண்டியதையும் மனதால் பார்க்காமல் கிரகித்துச் செயல்பட்டால் சமர்ப்பணத்தின் சூட்சுமம் பலன் தரும். யோகப் பலனை எதிர்பார்ப்பதே அதை இழக்கும் வழி. மெய்ம்மறந்து, எந்தச் சிந்தனையுமின்றி, நேரம் போவதே தெரியாமல், மனம் குதூகலமாக இறைவன் சூழலிருப்பதை உணரும் அன்பர் சமர்ப்பணம் செய்யக் கூடியவர்.

**Synthesis of Yoga** என்ற நூலில் சரணாகதித் தத்துவத்தை பகவான் விவரமாக, படிப்படியாக விளக்குகிறார். அதிலுள்ள முக்கிய கட்டங்களான கருத்துகள்:

1) பூரண யோகம் ஆசனம், பிராணாயாமம், மந்திரங்களைப் பயன்படுத்தவில்லை. பூரண யோகம் ஆன்மீகப் பரிணாம யோகம். ஆசனம் உடலுக்குள்ள முறை, பிராணாயாமம் பிராணனுக்குள்ளது. ஜபம், மந்திரம் மனத்திற்குரியவை. ஆன்மீக மனமுறைகளை மட்டும் கையாள்வதே நம் நோக்கம். அதனால் பெரும்பலனை சீக்கிரம் பெற முடியும் — சரணாகதி தத்துவம். மனித ஜீவன், ஜீவியம், சக்தி, ஆனந்தத்தைத் தெய்வீக ஜீவன், ஜீவியம், சக்தி, ஆனந்தத்திற்குச் சரணம் செய்வது முறை. இம்முறையால் அகந்தை கரையும்.

2) அகந்தை கரைந்தால் மனிதன் அகந்தையை இழந்து பிரபஞ்ச ஆத்மாவாவான். பிரபஞ்ச ஆத்மாவுக்குப் பிரபஞ்ச வாழ்வில் ஆனந்தம் உண்டு. அதை அனுபவிக்கும் மனிதன் அடுத்த கட்டத்திற்கும் உயர வேண்டும். பிரபஞ்சத்திற்கு அவனிடம் உள்ள ஆத்மா, பிரம்மத்தை எட்டித் தொட்டு, பிரம்மத்திற்குரிய ஆத்மாவாகி, அதனுடன் மனித சுபாவத்தையும் சரணம் செய்தால் பூரண யோகம் பூர்த்தியாகும்.

யோகத்தை மேற்கொள்ள தீவிரம், நீடித்த தீவிரம், **(sincerity)** உண்மை, ஆழ்ந்த ஈடுபாடு, ஜீவன் ஆழத்தில் நல்ல எண்ணம், மௌனம், அமைதி, இயல்பான ஆனந்தமான குதூகலம், பொறுப்புணர்ச்சி, நம்மைச் சேர்ந்தவர் அனைவர் செயலுக்கும் ஏற்கும் பொறுப்புணர்ச்சி, இனிமை, இதம், பதம், பக்குவம், பவித்திரம், இங்கிதம் ஆகியவை பயன்படும். இவையனைத்தும் ஒன்றே. ஒன்று போன்றவையே எனினும், கூர்ந்து பார்க்கும் பொழுது பெரும் வித்தியாசம் தெரியும். வித்தியாசம் விபரமானது. யோகம் செய்ய எந்தத் தகுதியும் தேவையில்லை என்பதும் உண்மை.

### ஜீவிய மணி

ராசியும், வசதியும் சேரா.

எதிரான இருவரிடமும் நல்ல பெயர் வாங்க முடியாது.

நட்பும், செல்வாக்கும் சேர்ந்து உடன் வாரா.

அறிவும், நம்பிக்கையும் அர்த்தபுஷ்டியாகா.

சுதந்திரமும், கட்டுப்பாடும் சுயமாக சேர முன்வாரா.

சுதந்திரமான கட்டுப்பாடு சொந்தமான பண்பு.



## அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

கர்மயோகி

### *1. திருவுள்ளம்*

தபஸ்வியின் நிஷ்டையும், பக்தனின் உருக்கமும், மாந்தரின் வழிபாடும், மனிதன் இறைவனை அடையச் செய்யும் முயற்சிகள். பகீரதப் பிரயத்தனம் செய்து பரம்பொருளை அடைய மனிதன் படும் தவிப்பை உலகம் அறியும். அந்த நாணயத்திற்கு மறுபுறமும் ஒன்றுண்டு. அதை நாமறியோம். இறைவன் மனிதன்மீது தீராக் காதல் பூண்டு, தணியாத அனலென எரிந்து, மனிதனுள் உறையும் ஆன்மா தன்னைத் திரும்பிப் பார்க்காதா என உருகி, மனித வாழ்வில் ஆயிரம் முறை குறுக்கே வந்து, தன் அன்பு மழையைப் பொழிந்து, அருட்பிரவாகத்தால் அவனை அணைத்திட முயன்று தவறாது தோல்வி பெற்று, ஏக்கமுற்று, காலமெல்லாம் காத்திருக்கிறான். மனிதன் அதை அறிந்தானிலன். இதன் பலனாக ஒரு சமயம் மனிதன் ஒரு கணம் நின்று, இறைவனை நினைந்து, பக்தியை உணர்ந்து, அவனை அடைய விரும்பினால், அதுவே இறைவனுக்குக் கிடைத்த பரிசு; இறைவன் அழைப்பை மனிதன் ஏற்றுக்கொண்ட சிறப்பு.

"இறைவனை நாடும் மனிதனை முன்னரே இறைவன் தேர்ந்தெடுத்துவிட்டான்" என்பது ஸ்ரீ அரவிந்தரின் கூற்று **(He who chooses the infinite has already been chosen by the infinite).** ஏற்கனவே இறைவன் நம்மைத் தேர்ந்தெடுத்துவிட்ட காரணத்தாலேயே நாம் இன்று அவனை நாடுகிறோம் என்பது பழம்பெருங்கருத்து. மனிதன் மறந்துவிட்ட ஒன்று, மனித உள்ளம் திருவுள்ளத்தை அறியும் நேரம், அதை நாடும் கணம், சிருஷ்டியின் சிறப்பான நேரம், சிருஷ்டியின் இலட்சியம் பூரணமடையும் தருணம்.

சிறு குழந்தைகள் பத்துப் பேர் ஒன்று சேர்ந்து விளையாட வரும்பொழுது, அவர்கள் குதூகலமாக இருப்பார்கள். இரு

கட்சியாகப் பிரிந்து, "நீங்கள் ஒளிந்துகொள்ளுங்கள்; நாங்கள் கண்டுபிடிக்கிறோம்" என்று திட்டமிடும்பொழுது குதூகலம் கிளர்ச்சி மிகுந்ததாகும். ஆட்டம் ஆரம்பித்து, ஒளிந்துள்ள குழந்தையை மற்றொரு குழந்தை கண்டுபிடித்த நேரம், ஆரவாரம் மிக்க அதிர்ச்சி நிறைந்த கோஷம் கேட்கும். அதே குழந்தைகள் தங்கள் வாழ்நாளில் அதுபோன்ற ஒரு சந்தோஷத்தை அனுபவிப்பது அரிது. இதற்குக் குழந்தைகளின் விளையாட்டு எனப் பெயர். இறைவன் தன்னுள் ஒரு பகுதியை எடுத்துப் பல்லாயிரம் ஆன்மாக்களாக்கி அவற்றை, "நீங்கள் பூவுலகுக்குச் சென்று இருளில் ஒளிந்துகொள்ளுங்கள். நான் அங்கு வந்து உங்களை எல்லாம் தேடி அலைந்து கண்டு-பிடிக்கிறேன்" எனச் சொல்லி உலகத்தைச் சிருஷ்டித்தார். ஒவ்வொரு ஆன்மாவும் இருளால் கவ்வப்பட்ட உடலில் ஒளிந்துகொண்டு, பொய்யால் பீடிக்கப்பட்ட வாழ்வை ஆரம்பித்து நடத்தும்பொழுது, இறைவன் அவற்றைத் தேடி பூவுலகில் இறையருளாக வந்து, க்ஷணமும் தவறாமல் தன் அருளழைப்பை இடையறாது விடுக்கிறான். அந்த அழைப்பு எந்த ஆன்மாவின் காதிலும் விழுவதில்லை. மௌனமாக ஆயிரம் அற்புதங்களை நிகழ்த்தி, தானிருப்பதை அறிவிக்-கின்றான். அற்புதங்களின் பலனைப் பெற்றவர் அடுத்த க்ஷணம் வேறு வேலையைக் கவனிக்கப் போய்விடுகின்றனர். இறைவனின் ஏமாற்றத்திற்கு அளவில்லை.

அளவிறந்த காதல் கொண்ட இறைவன் அளவில்லாத அருள் மழையால் மனித வாழ்வைச் சூழ்ந்து புனிதப்படுத்தினால், மனிதன் தன் சுகதுக்கங்களின் பிடிப்பில் மேலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறானே தவிர, தன்னை நெருங்கிவரும் இறைவனின் காலடிச் சத்தம் அவன் காதில் விழுவதில்லை. இவையெல்லாம் கடந்து ஒரு பக்தன் இறைவனை நினைத்தால், இறைவன் அவன் மனதில் உருவமாகத் தென்படுகிறான். அவனை அழைத்தால் அருட்பிரவாகமாக மனிதனுடைய ஜீவனுள் இறைவன் நுழைகிறான். கண்ணீர் மல்க பக்தன் சாந்தத்தால் சூழப்பெறுவதையும், ஒளியின் கதிரால் பிரகாசப்-படுவதையும், அருவிபோல் அனந்தன் தன் பிராணனுள்



நுழைவதையும், பெருமிதம் விம்மும் உடல் பூரிப்பு அடை-வதையும் காண்கிறான். தன் அழைப்பை மனித ஜீவன் ஏற்றுக்-கொண்டபொழுது, இறைவன் அவனை விட்டகல்வதில்லை. வாழ்வின் செயல்களில் சிக்கிய ஜீவன் ஒரு க்ஷணம் தன்னைத் திரும்பிப் பார்க்கும் நேரத்திற்காக பக்தனுடைய சூழலில் **(atmosphere)** இறைவன் சூட்சுமமாக இரவு, பகலாக இருக்கிறான். இதற்கு இறைவனின் லீலை என்று பெயர்.

ஒரு ரிஷியின் தபோவலிமை அதிகமாவதை அறிந்த இந்திரன் தன் பதவிக்கு ஆபத்து வரலாமென உணர்ந்து, அவர் தபஸைக் கலைக்க ஓர் அப்ஸரஸை அனுப்புகிறான். நதி தீரத்தில் காலைச் சந்தியாவந்தனம் முடிந்து திரும்பும் ரிஷி, அப்ஸரஸைப் பார்த்து தம்மை இழந்து அவளுடன் இரண்டறக் கலந்த நிலையில் ௯௦௦ ஆண்டுகளைக் கழித்தார். பின்னர் ஒரு நாள் தம் சுயநினைவு வந்து, அன்று மாலை அவளிடம் "நதிக்கரைக்குச் சென்று சந்தியாவந்தனம் முடித்து வருகிறேன்" என்றார். ௯௦௦ வருஷங்கள் இல்லாத சந்தியாவந்தனம் இப்பொழுது எப்படி வந்தது என அவள் கேட்டபொழுதுதான் ௯௦௦ வருஷங்கள் ஒரு பொழுதாகப் போனது ரிஷிபுங்கவருக்குத் தெரிய வருகிறது. புனித மனத்தின் ஆசையில் எழுந்த பாசத்தின் பிணைப்பு இது. இறைவனின் அன்பு மனிதனுக்காக யுகாந்த காலமாகக் காத்துக் கிடக்கிறது.

ஒரு ஜீவன் இறைவனை நாடினால் திருவுள்ளம் பூரித்துச் சிருஷ்டியின் கோலாகல நேரம் வந்து, தெய்வலோகப் பூமாரி பொழிவதைப் போன்ற ஆரவாரம் உலகத்தைச் சூழ்ந்து கொள்ளும். அது இறைவனுக்குக் கிடைத்த வெற்றி. நெடுநாள் அந்த வெற்றி கிடைக்காவிட்டால், தான் சிருஷ்டித்த ஆன்மாக்களின் அன்பை நாடி இறைவன் தானே உலகில் அவதரித்து, அந்த ஆன்மாக்களைத் தாங்கி உலவும் மனிதர்களை விழைந்து, அவர்கள் வாழ்வில் கனவிலும், நனவிலும் சூட்சுமமாகச் செயல்பட்டு அவர்கள் அறியாத இறையருளை அவர்கள்மீது பொழிந்து, தன்னை ஏற்றுக் கொண்டு, தன்னை நோக்கி அவர்கள் வரும் கணத்தை எதிர்பார்த்து ஆன்மநேய ஒருமைப்பாட்டின் பூரணத்திற்காகக் காத்திருக்கிறான். அவனை

நாடி எவரும் வருவதில்லை. ஆயிரம் வருடங்களில் ஒருமுறை இராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கு விவேகானந்தர் கிடைத்தது போல் ஒரு நிகழ்ச்சி ஏற்படுகிறது. “உன்னைக் காணாவிட்டால் என் மனதைப் பிழிவது போலிருக்கிறது” என்று பரமஹம்ஸர் விவேகானந்தரிடம் துண்டைப் பிழிந்து காண்பித்துச் சொன்னார்.

அவதார நிலையிலும் தன்னை மனித ஜீவன் திரும்பிப் பார்க்காவிட்டால், மனித உருவாக வந்து அவனெதிரில் காட்சி அளிக்கிறான். இறைவனாகவும், அவதாரமாகவும், குருவாகவும், நண்பனாகவும், தாயாகவும், குழந்தையாகவும், ஆசிரியனாகவும், ஆயிரம் உருவில் மனிதனின் வாழ்வுப் பாதையில் குறுக்கிட்டு அவன் பக்திப் பார்வைக்காக ஏங்கும் இறைவனின் அழைப்பு அணையாத ஜ்வாலை. அதை ஏற்றுக்கொள்ளும் ஜீவன் திருவுள்ளத்தைப் பூர்த்தி செய்யும் உடனுறை தெய்வம். அந்த ஜீவனின் தவிப்பும், இறைவனின் தவிப்பும் ஒன்றை ஒன்று பூரணப்படுத்தும் செயல். சிருஷ்டியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் முதல் அடி. இதுவே இறைவனின் இலட்சியத்தின் முதல் இலக்கு. பூரண யோகம் இங்கு ஆரம்பித்து, இறைவனின் கடைசி இலட்சியமான மனித தெய்வ சிருஷ்டியைச் சாதிக்கும் பணியை உலக மாந்தருக்கு அளிக்க விழைகிறது. இறைவனை அழைக்கும் மனித ஹ்ருதயத்தில் எழுவது அமுத ஊற்று. மனிதனை அழைத்து, அவனைத் தேடியலைந்து ஆர்வம் மிகுந்து, யுகாந்த காலமாகக் காத்துக்கிடக்கும் இறைவனின் திருவுள்ளத்தில் எழுவது அருளமுத ஊற்று.

தொடரும்...

꧁꧁꧁

**ஜீவிய மணி**

அனுபவம் விவேகமானால் ஆனந்தம் நன்றியாகும்.
நன்றியில் ஆனந்தம் இளமையின் விவேகம்.



## அன்பர் அனுபவம்

அழகம்மை, தர்மபுரி

என் பெயர் அழகம்மை. நான் தற்பொழுது தருமபுரி மருத்துவக் கல்லூரியில் **II Year M.B.B.S.** படிக்கிறேன். என் **I Year M.B.B.S.**-இல் இறுதித் தேர்வு கடந்த ஆகஸ்ட் 03 முதல் 10 தேதி வரை நடைபெற்றது. முதல் பரீட்சை **Anatomy paper**. நான் நன்றாகப் படித்துவிட்டு மதரிடம் பிரார்த்தனை செய்துவிட்டுச் சென்றேன். வினாத்தாள் மிகவும் எளிமையாக இருந்தது. ஆனால் எனக்குப் படித்த எதுவுமே ஞாபகம் வரவில்லை. எனினும் அழுதுகொண்டே நூறு மதிப்பெண்-களுக்கு என்னால் முடிந்தவரை பக்கங்களை நிரப்பினேன். நன்றாகப் படித்துவிட்டு எழுத முடியவில்லையே என்று வருந்தி அன்று முழுவதும் அழுது கொண்டே, மறுநாள் பரீட்சைக்கும் சுத்தமாகப் படிக்கவில்லை. இரவு முழுவதும் தூங்காமல் படித்தால்கூட எல்லாப் பாடங்களையும் படிக்கவே இயலாது. ஆனால் நான் எதுவுமே படிக்காமல், ஏதோ என் அம்மா சொன்னதற்காக எதுவானாலும் நீங்களே காப்பாற்றுங்கள் என்று பாரத்தை மதரிடம் ஒப்படைத்துவிட்டு, அடுத்த பரீட்சைக்குச் சென்றேன். அன்றைய வினாத்தாளும் எளிமையாகவே இருந்தது. முதலில் படித்திருந்தது சிறிதளவிற்கு நினைவில் இருந்ததால் சுமாராக எழுதினேன். ஆனால் இரண்டு பேப்பர்களும் சுமாராகத்தான் எழுதினேன். 200-க்கு 100-க்கு மேல் மதிப்பெண்கள் எடுத்தால்தான் பாஸ் செய்ய முடியும்.

எல்லாத் தேர்வுகளும் முடிந்தவுடன் சென்னைக்கு வந்தேன். அம்பத்தூர் தியான மையத்திற்குச் சென்று எல்லாவற்றையும் சொல்லி அழுதேன். அங்கே இருந்த சேவை அன்பர் அருளமுதம் புத்தகம் வாங்கிப்படி என்று கூறினார்கள்.

நானும் அதன்படி வாங்கிப் படித்தேன். அவர்கள் சொன்னதுபோல் அன்னையிடம் பிரார்த்தனை செய்தேன். அன்னை என்னை காப்பாற்றி விட்டார்கள். என்னுடைய ரிசல்ட் அக்டோபர் 9 அன்று மாலை 7.30 மணிக்கு வந்தது. **Anatomy**

**paper**-இல் 200-க்கு 114 **marks** பெற்று **pass** செய்திருந்தேன். **Fail**-ஆகி விடுவேன் என்று நினைத்திருந்தேன். என்ன ஆச்சரியம்! அன்னை என்னை பாஸாக்கி இருந்தார்கள். உடனே அம்பத்தூர் தியான மையம் சென்று, சேவை அன்பரிடம் கூறினேன். அவர்களும் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். என்னுடைய வீட்டில் அனைவரும் மிகுந்த சந்தோஷம் மற்றும் ஆச்சரியமும் அடைந்தனர்.

நான் எப்படி **pass** செய்தேன் என்றும், அன்னையின் அளப்பரிய அருளை நினைத்தும் பூரிப்படைந்தேன். அன்னை என் திறமைக்கு அதிகமாகவே பலனை அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள்.

நன்றி.

## ஜீவிய மணி

வாழ்க்கை ஒருவருக்குச் செய்த செயலில் நியாயம் வழங்குகிறது. அடுத்தவருக்குப் பூரண நியாயம் வழங்க, தனித்தனிச் செயலில் நியாயம் கிடைப்பதில்லை. சிறு நியாயம் இல்லாமல் பெரு நியாயம் பெறுபவர், கீழிருந்து மேலே உயருபவர். சிறு நியாயம் மட்டும் பெறுபவர், அதே நிலையில் இருப்பவர். தனிச் செயல்களில் நியாயம் பெற்றுப் பூரண நியாயம் பெறுபவர் உயர்ந்த இடத்தில் ஆரம்பித்து மேலும் உயருபவர்.

ஆனால் எல்லோருக்கும் எல்லா விஷயங்களிலும் வாழ்வு நியாயம் வழங்குகிறது. சிறுசிறு விஷயத்தில் அநியாயத்தைக் கண்டு பொருமினால், பூரண நியாயம் வருவது தடைப்படும். சிறு விஷயத்தில் அநியாயம் பெற்றவர், உள்ளே போய் வேலையை ஏற்றுக்கொண்டால் அவருக்குப் பூரண நியாயம் உரிய காலத்தில் உண்டு.



## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 98. நிகழ்ச்சிகளின் பின்னால் அன்னை ஜகஜ்ஜோதியாய் ஜொலிக்கிறார்.

- 1970 முதல் 1980 வரை கடையடைப்பு, ஹர்த்தால், பந்த் சற்று அதிகமாக இருந்தது. அத்துடன் அவை பயங்கரமான அரசியல் பிரச்சனைகளை ஆதரிப்பவையாகும்.
- அதுபோன்ற ஹர்த்தால் வரும்பொழுது கடைக்காரர்கள் பயப்படுவார்கள். கலவரம் கட்டுமீறிப் போகுமென எந்த நேரமும் எதிர்பார்க்க வேண்டியிருக்கும்.
  அந்நாட்களில் புதுவையில் பேரமைதி பெரும் அளவுக்குக் கனத்து பொங்கி வழிவது தெரியும்.
- அதுபோன்ற தரிசனம் பெறுவோர்க்கு பூரண யோக வாய்ப்புண்டு.
- வன்முறை காளியின் ஆர்ப்பாட்டம். அது அன்னை தரிசனம்.
- லிஸி திட்டியது டார்சிக்கு இனிப்பாக இருந்தது, சூழலில் தெய்வம் எழுவதாகும்.
- பூரண யோகத் தத்துவப்படி எல்லாச் செயலும் இறைவன் வெளிப்பாடே.
- நம் அறியாமை அதை நல்லது, கெட்டது எனப் பிரித்துக் காண்கிறது.
- செப்புக் காசு, நிக்கல் காசு, வெள்ளிப் பணம், நோட்டு அனைத்தும் பணம்.
- வெள்ளிக் காசு மட்டுமே பணம் மற்றவை பணமில்லை என்பது சரியாகாது.
- உயர்ந்தவன், தாழ்ந்தவன் அனைவருக்கும் எலக்ஷனில் ஒரு ஓட்டு தான்.

- யுகம் எழுந்து மறையும் தாளம் **Squandering eternity on a beat of time.**
- தாளத்தின்பின் தெரியும் யுகம் இறைவன்.
  கர்னாலியில் விக்ரஹத்திலிருந்து எழுந்த காளியைப் பார்க்கும்வரை பகவானுக்குத் தெய்வ நம்பிக்கையில்லை.
  ஒரு குரல் கேட்டு ஓராயிரம் மக்கள் ஆர்ப்பரித்து எழுவது தலைமையின் தகுதி.
- பேய் வந்து பகவான்முன் பித்தலாட்டம் செய்தது. பகவான் அசையவில்லை.
  பேய் ஏமாந்து திரும்பியது. பகவான் இனிமையை உணர்ந்தார். அது கிருஷ்ணனின் விஷமம் என்றறிந்து சிரித்து மகிழ்ந்தார்.
  பகவானுக்குப் பேயின் பித்தலாட்டத்தின் பின்னும் தரிசனம் உண்டு.
- கல்லூரிப் பேரவையில் சிறப்பாகப் பேசுபவனுக்கு, அரசியலில் எதிர்காலம் உண்டு. அது விளையும் பயிர்.
- எழுதும் கடிதம் கவர்ச்சியானால் அவனுக்கு எழுத்தாளனாகும் வாய்ப்புண்டு.
- வீட்டில் அடுக்கியிருக்கும் நெல் மூட்டைகள்மீது ஏறி 10 வயது சிறுவன் சொற்பொழிவாற்றியது எதிர்காலத்தில் சிறப்பான பேச்சாளராக வருவான் என்று கூறுகிறது.
- ஹோட்டல் சர்வர் பிரபலமானால், எதிர்கால ஹோட்டல் முதலாளியாவான்.
- ஹோட்டல் முதலாளி பில்லுக்கு மிச்சம் தரும்பொழுது, சில்லரையை வீசுவான். கடை மூடப்பட்டது.
- நாகலிங்கப் பூ வருகிறது எனில் செல்வம் வரும் என்று தெரிகிறது.
- புற்றிலிருந்து எறும்பு வெளிவந்தால், மழை வரப்போகிறது என அர்த்தம்.
- மலை மீதுள்ள குதிரைகள் காரணமின்றி கனைத்தால், எரிமலை வெடிக்கப் போகும் அறிகுறி அது.



## அஜெண்டா

### கென்னடியும், குருஷேவும்

Volume 5, page 28

- சத்பிரேமுக்கு, பிரெஞ்சு சர்க்கார் பென்ஷன் தருவதால், அச்சர்க்கார் தன் வேலையில் பங்கு கொள்வதாக அன்னை கூறினார்.
- 1965 முதல் 1973 வரை ‘அருள்’ என்ற பத்திரிக்கைக்கு ஆண்டு-தோறும் இருமுறைகள் ரூ.25/- விளம்பரம் கொடுத்தவர் 3000 கோடி ரூபாயில் தொழில் நடத்தினார். அவருடனிருந்த என்ஜினீயர் எவரும் அதுபோல் வளரவில்லை.
- கென்னடி அன்னையை வந்து தரிசிக்க முடிவு செய்தார். குருஷேவ் ஆரோவில்லுக்கு ஆதரவு தர சம்மதித்தார்.
- அன்னை இச்செயல்களை அளவுகடந்து பாராட்டினார். தீயசக்திகள் ஒருவரைக் கொலை செய்தன. அடுத்தவரை பதவியினின்று நீக்கின. தீயசக்திகள் அதைத் தடை செய்தன என்றார்.
- நெய்வேலி நிலக்கரி திட்டத்தைக் காரமாக எதிர்த்தவர் பலர்.
- 4-ஆம் ஐந்தாண்டுத் திட்டம் எதிர்ப்பால் பல ஆண்டுகள் தாமதப்பட்டது.
- பாங்க் தேசியமயமாக்கும் திட்டத்திற்கு எல்லாத் திசைகளி-னின்றும் எதிர்ப்பு.
- கிராமத்திற்குக் கடன் தர பாங்கில் அளவுகடந்த எதிர்ப்பு.
- 1950-இல் நிலத்திற்கு உரமிட எதிர்ப்பு.
- எதிர்ப்பில்லாத நல்ல பெரிய காரியங்களேயில்லை.
- 100 ஆண்டிற்குமுன் அமெரிக்க ஜனாதிபதி டாலர் நோட்டடிப்பதை எதிர்த்தார்.
- தீய சக்திகள் சூட்சும உலகில் செயல்படுகின்றன.
- பகவானைக் கடத்த 5 முறைகள் முயன்றனர். முடிவாக முயன்ற போலீஸ் அதிகாரியை அவர் மைத்துனரே சுட்டுக் கொன்றார்.
- **Veto Power**-ரை ஒழிக்க வல்லரசுகள் எதிர்க்கின்றன.

- லட்ச ரூபாய் மாதம் சம்பாதிப்பவர் சொந்த தொழிலாரம்பிக்க முயன்றால், பெரும் எதிர்ப்பு எல்லாப் பக்கமிருந்தும் வரும்.
- ஒரு மாணவன் முதலாம் ஆண்டு கல்லூரியிலிருந்து வெளி-வந்து சொந்தமாகப் படிக்க நினைத்தால், எதிர்ப்பை கற்பனை செய்யலாம்.
- இந்த எதிர்ப்புகள் சூட்சும உலகிலும், அரசியலிலும் எழுபவை.
- பசுமைப் புரட்சியை ஆரம்பிக்க வரும் எதிர்ப்பை அறிந்த சுப்ரமணியம், பிரதமரை பார்லிமெண்டில் அதை ஆதரித்துப் பேச வேண்டும் என்றார்.
- இந்திய சுதந்திரத்தை எதிர்த்த சர்ச்சிலை அன்றிருந்த உலக அரசியல் சூழல் பதவியிலிருந்து விலக்கியது. சுதந்திரம் வந்தபின் மீண்டும் பதவிக்கு வந்தார்.
- காலம் பெரியது, ஆன்ம விழிப்புள்ள மனிதன் காலத்தையும் வெல்லுவான்.
- தீய சக்திகள் சில சமயங்களில் அவனையும் அழிக்கும்.
- மூன்றாம் உலகப் போரைத் தடுக்க அன்னை செய்தவை இவை.

### ஜீவிய மணி

அன்னையிருக்கிறார் என்றறிவது ஞானம். அவரிருப்பதை நினைக்காமலே உணர்வது தைரியம். இடைவிடாது அவரை அழைப்பது பாதுகாப்பு. எனக்கு அழைக்கவே தோன்றவில்லை என்ற நிதானம் அன்னை ஜீவியம் நம்முள் இருப்பதாகும். நாமும், அன்னையும் பிரிந்துள்ள நேரம் அழைக்கிறோம். அவரே ஒரு பொறியாக உள்ளே அமர்ந்தபின் அழைப்புக்கு வேலையில்லை. ஞானம் என்பது அன்னையை அறிவது. தைரியம் என்பது அன்னையை நாதத்தில் உணர்வது. தைரியலட்சுமி அன்னை. அன்னையே தைரியமும், ஞானமும் ஆவார்.



## பிரார்த்தனையின் கட்டங்கள்

கர்மயோகி

பிரார்த்தனை பலிக்கும், பலன் தரும், கேட்ட பலனைத் தரும், அதிகமாகவும் தரும், கேட்காததையும் தரும். இவை ஆதாயமான பலன்கள். இது நாம் பொதுவாகப் பெறுவது. கல்கத்தாவில் புது காலனியில் 230 வீடுகள் உள்ள இடத்தில் புதியதாகக் குடி வந்தவர், அன்று மாலை, அந்த டவுன்ஷிப்பில் எந்த வீட்டிலும் தண்ணீர் வரவில்லை, அவர்கள் வீட்டில் மட்டும் எப்படி வந்தது என ஆச்சரியமாக அறிந்தார். **அவர் பிரார்த்தனை செய்யாமல் பெற்ற பலனிது.** இதுபோன்ற அனுபவம் ஏற்படும்பொழுது நாம் சந்தோஷப்படுகிறோம். அன்னையை அதிகமாகப் புரிந்து ஏற்றுக் கொள்கிறோம். இதற்குமேல் நாம் செய்யக் கூடியவை பல உண்டு. அவை,

| | |
|---|---|
| 1. பிரார்த்தனையை சமர்ப்பணமாக மாற்றுவது, | 1. பிரார்த்தனை பலித்தால் பலன் வரும். சமர்ப்பண-மானால், அதுவே பிரார்த்தனையின்றிப் பலிக்கும் திறன் எழும், மௌனம் எழும். |
| 2. பிரார்த்தனை செய்யும் மனநிலையை சமர்ப்பணம் செய்வது, | 2. இது கீதை கூறுவது. பலித்தால் மோட்சம் கிட்டும். மோட்சத்தை ஏற்காவிட்டால், மோட்சத்தைப் பெறும் தகுதி திருவுருமாறும். **மோட்சம் பலித்த மௌனம் வரும்.** |

| | | | |
|---|---|---|---|
| 3. | அம்மனநிலையின் அடிப்படையைச் சமர்ப்பணம் செய்வது, | 3. | இது பூரண யோகத்தின் ஞான யோகப் பகுதி சித்திப்பது, பகவான் 1914இல் அன்னைக் களித்த மௌனம் பெறும் பெரிய ஆன்மீக நிலை. |
| 4. | அவ்வடிப்படையைத் திருவுருமாற்றப் பிரார்த்திப்பது, | 4. | பெறும் ஆன்மீகத் திறன் தரும் ஆன்மீக சித்தி-யாகும், அன்னை பெற்றார், பகவான் கொடுத்தார். |
| 5. | அப்பிரார்த்தனையைச் சமர்ப்பணம் செய்வது, | 5. | சமர்ப்பணம் மனத்தில் அபிப்பிராயமாகவும், நெஞ்சில் நோக்கமாக-வுமுள்ளது. இதைச் செய்தால் சமர்ப்பணம் நெஞ்சின் நிரந்தர நோக்கமாகும். (attitude) |
| 6. | பிரார்த்தனை, சமர்ப்பணம், திருவுருமாற்றம் ஆகியவை பலித்து ஆன்மீகப் பலன் தரும் நேரம் **அவற்றைச் செய்ய மறுப்பது,** | 6. | இது சமர்ப்பணத்தை சரணாகதியாக்கி, ஜீவனின் நோக்கமாகச் (motive) செய்யும். |
| 7. | மறுக்க முடியும் கட்டத்தில் "அன்னையின் திருவுள்ளம் நிறைவேறட்டும், என் விருப்பமல்ல" என்று கூறுவது, | 7. | அன்னைக்கு அந்நிலையில் கருவியாகும். |
| 8. | அதையும் சொல்ல மறுத்து மௌனம் சாதிப்பது, | 8. | இந்நிலை மௌனத்தின் பின்னுள்ள மௌனம் (Silence beyond Silence) தரும். |



| | | | |
|---|---|---|---|
| 9. | அன்னை தானாகத் தருவதை ஏற்கும் மனநிலையை நாடி ஏற்பது, | 9. | பெற்ற சித்தி பிரபஞ்ச சித்தியாகும். |
| 10. | ஒரு விஷயத்தில் பலிக்கும் பிரார்த்தனை, சமர்ப்பணம் மனத்தின் முழுமைக்குப் பலிக்க விரும்புவது, | 10. | பிரபஞ்ச சித்தி நிலையாகும். |
| 11. | அதுவே மனத்திற்கும், நெஞ்சிற்கும் பலிப்பது, | 11, 12. | பூரண யோகம் அடுத்தடுத்த கட்டங்களில் பலிப்பது. |
| 12. | அது ஜீவனுடைய முழுமையில் பலிப்பது, நிரந்தரமாவது, | | |
| 13. | காலத்தில் பலிப்பது காலத்தைக் கடந்து பலிக்க வேண்டுவது, | 13. | கிருஷ்ண பரமாத்மா நிலையில் அந்த சித்தி பூரண யோக சித்தியாவது. |
| 14. | அதுவே மூன்றாம் நிலைக் காலத்தில் பலிக்க ஜீவன் ஆர்வம் கொள்வது, | 14. | இது சத்திய ஜீவிய சித்தியாவது. |
| 15. | பக்தனுக்குப் பலிப்பது, புருஷனுக்குப் பலிக்க விரும்புவது, | 15. | ஒருவர் யோகம் அடுத்தவருக்குப் பலன் தரும் பிரபஞ்ச நிலை. |
| 16. | அதுவே ஈஸ்வரனில் சித்திப்பது, | 16. | **வாழ்வு அற்புதமாகும்.** |

இக்கட்டங்களையெட்ட **நாம் உள்ளே போக வேண்டும்.** உள்ளே போவது பலிக்கும் நிலை மௌனத்தால் மனம் பெறும் அமைதியால், தானே தியானம் வரும் தகுதியால், பெரு ஆன்மீக நிலை சிதறாமல் நீடிக்கும் நேரத்தால், எரிச்சல் எழாததால், எரிச்சல் வரவேண்டிய நேரம் இனிமை எழுவதால், கடந்த கால

துரோகங்களின் உறுத்தல் குறைந்து மறைவதால், மன்னிக்கக் கூடிய குற்றங்கள் அளவிலும் தரத்திலும் பெருகுவதால், இடைவிடாத அன்னை நினைவு தானே எழுந்து, ஆழ்ந்து, இனித்து, நீடிப்பதால் தெரியும்.

இவ்வளவு முறைகளுள்ளபொழுது, ஏன் எவரும் எதுவும் செய்யவில்லை என்ற கேள்வி எழுகிறது. அப்படியானால், அது எவராலும் முடியாததோ என்று தோன்றுகிறது.

**இரண்டுமில்லை, இதுவே மனித சுபாவம்**

என்பதே பதில். மனிதன் தன்னால் முடிந்ததைச் செய்ய மாட்டான். குறைந்த பட்சம் போதும் என்ற அளவிலேயே செய்வான் என்பதால் பகவான்

**இடையில் முயற்சியைக் கைவிடாதே**

என்றார். நம் அனுபவத்தில் கண்டதே முடிவு என்று மனம் நினைக்கும்; அறிவு அதைக் கடந்து சாதிக்கும் எனத் தோன்றாது. பிரார்த்தனை பலித்தபின் செய்வதற்கு என்ன உண்டு என்பது பொதுவான கொள்கை. இந்த 16 கட்டங்களும் பிரார்த்தனை பலித்த பிறகே செய்யக் கூடியவை. எடுத்துச் சொல்லும்பொழுது, இப்படியெல்லாம் முடியும் என நான் கருதவில்லை என்பார்கள். மற்றவர்கள், தெரியாததில்லை, செய்வதில்லை என்பார்கள். வேறு சிலர், செய்து பலனைக் கண்டபின், இப்படிப் பலிக்கும் எனக் கருதியதில்லை என்பர். புதிய முறையை ஏற்றபின் பழைய பாணியில் செயல்பட்டால், பழைய பலனே வரும் என்று அறிவதில்லை. புதிய முறை என்றவுடன் பலன் பலமடங்கு எதிர்பார்ப்பார்கள். இந்த 16 கட்டங்களும் அடுத்தடுத்த கட்டங்களில்லை, அடுத்தடுத்த லோகங்கள். சம்பளம் பெறுபவன் சுயதொழில் ஆரம்பித்தால் பலன் அதிகம் எனக் கூற முடியாது. ஒன்றை மற்றதுடன் ஒப்பிட முடியாது. அதிகாரி அரசியல்வாதியாவது புதிய பாதை திறப்பது. பூஜை, நிஷ்டை ஆத்மாவுக்குச் செய்வது. அவை வாழ்வில் பலிப்பது அவசியம் என்று உணருவதில்லை. ஒன்று படிக்காதவன் வாழ்வு, அடுத்தது படிப்பை முழுவதும் முடித்தவன் வாழ்வு. நம்மூரில் பட்டம் பெறுவதும், அதே



பட்டத்தை அமெரிக்காவில் பெறுவதற்கும் உள்ள வித்தியாசம் சில இடங்களில் உண்டு. ஒரு கட்டத்தில் யோகம் உடல் மாற வேண்டும் எனக் கூறுகிறது. அதுபோல் இம்முறைகளில் சில கட்டங்களில் கடைசிக் கட்ட ஊழியனுக்குத் தலைமை அதிகாரியின் படிப்பும், அனுபவமும் தேவைப்படுவது போலிருக்கும். கட்டங்களைக் கடக்கும்பொழுது, மாட்டு வண்டியிலிருந்து ரயிலுக்கும், அங்கிருந்து விமானத்திற்கும் மாறும் நிலை உள்ளது என அறிவோம்.

எலிசபெத், விக்காமை மணக்க முயன்று தவறிவிட்டாள். முடிவில் டார்சியை மணந்தாள். விக்காம் வருமானம் £300. அவன் நிலையில்லாதவன், தறுதலை, சூதாடி, கடன்காரன். டார்சி உயர்ந்த குணமுள்ளவன். £10,000 வருமானமுள்ளவன். ஒரு முறைக்கும், அடுத்த முறைக்கும் அந்த அளவு வேறுபாடுண்டு. உள்ளூர் ஹோட்டலுக்கும், 5 நட்சத்திர ஹோட்டலுக்கும் உள்ள வித்தியாசம் மற்ற இடங்களில் உண்டு. புதுக்கோட்டை மகாராஜாவுக்கும், மைசூர் மகாராஜாவுக்கும் உள்ள வித்தியாசமுள்ள நிலைகள் பல. பங்களாதேஷ் ஐ. நா. வில் உறுப்பினர். பிரான்சும் உறுப்பினர். ஆனால் வேற்றுமை அதிகம். ஜப்பான் பெரிய நாடு. அதன் பணம் யென் (**Yen**) எனப்படும். அமெரிக்காவின் பணம் டாலர். ஒரு டாலருக்கு 110 **Yen** சமம். இரண்டும் பணமாகும். பஞ்சாயத்து தலைவருக்கும், ஜனாதிபதிக்கும் உள்ள வேறுபாடு மற்ற இடங்களிலுண்டு.

- நாம் அறியாதவை ஏராளம்.
- நாம் அறிந்து செய்யாதவை ஏராளம்.
- இக்கட்டங்கள் என்ன என்பதைச் செய்து பலன் பெறும் வரை அறிய முடியாது.
- செய்து, பலன் பெற்றுப் பாராட்டிய பின்னும் தொடர்ந்து செய்யத் தோன்றாது.
- அன்னையின் அருளை முழுமையாக அறிவது இயலாது.

★★★

## சூட்சும விஷயங்கள் ஜட விஷயங்களைவிட சக்தி வாய்ந்தவை

என். அசோகன்

ஒரு விஷயம் எவ்வளவுக்கெவ்வளவு சூட்சுமமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அது சக்தி வாய்ந்ததாக இருக்கும் என்கிறார் ஸ்ரீ அரவிந்தர். சமூக வளர்ச்சிக்குரிய முப்பத்திரண்டு கருத்துகளில் இதுவும் ஒன்றாகும். ஓர் அறையைத் துரியோதனன் வைக்கோல் மூலமாகவும், தருமபுத்திரர் வாசனை திரவியங்கள் மூலமாகவும் நிரப்ப முயன்ற மகாபாரதக் கதை மூலம் இக்கருத்துகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. மிகப்பெரிய சொத்து ஒன்று ஒரு சிறிய காசோலை வடிவிலும் அடங்கி விடுகின்றது. அதிலுள்ள கையெழுத்து அதற்குரிய சூட்சும சக்தியினைத் தாங்கி வருகிறது. மிகப் பெரிய கிராமப்புறமாக விளங்கும் இவ்வுலகத்தில் சக்தி உறைவது ஜட பூமியில்தான். கடந்த ஓரிரண்டு நூற்றாண்டுகளாகத்தான், நகர்ப்புறத்தை நோக்கி மக்கள் குடிபெயர்வதைப் பார்க்கிறோம்.

நகரங்கள், முக்கியமாக அவற்றின் தலைநகரங்கள் கல்வி, கேளிக்கை, வியாபாரம், வணிகம், வங்கிகள், மற்றும் பண்பாட்டுத்துறை, மேலும் அதிகாரம் இவற்றின் உறைவிடமாக விளங்குகின்றன. ஒவ்வொரு வகையில், ஒவ்வொன்றின் சூட்சுமம் தனிப்பொருளாக வெளிப்படுகிறது. கிராமத்தின் அடையாளம் பூமி, நகரத்தின் அடையாளம் பணம். பல்கலைக் கழகங்கள், நகரத்தின் பண்பாட்டுச் சின்னங்களாக இருக்கின்றன. புதியதாகத் தோன்றிய நாடுகளில் கிராமம் என்பதே கிடையாது. அப்படி ஒரு கிராமம் ஏதேனும் இன்னமும் இருந்தால் அங்கு நகரத்தின் எல்லா வசதிகளும் இருக்கும். வோர்ட்ஸ்வொர்த் (Wordsworth) எனும் கவியின் காலத்தில் பதினைந்து மைல்கற்கள் நடப்பது என்பது தினசரி அங்கமாக விளங்கியது. இன்று சிறிய ஊர்களில்கூட பேருந்துகள் உள்ளன. ஒரே தெருவில் அவற்றிற்கு இரண்டு நிறுத்தங்களும் இருக்கும். **Pride and Prejudice** எனும் கதையில் தாயார் மிகவும் சுறுசுறுப்பானவள், குடும்பத்திற்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, ஆற்றல் வாய்ந்தவளாகச் செயல்பட்டு எப்படியாவது தன் பெண்களுக்குத் திருமணம் நடத்தி முடித்துவிட வேண்டும் என்று தீவிரமாக நடந்து வருகிறாள். அவளிடத்திலோ, அவள் செயல்படும் விதங்களிலோ அல்லது அவளுடைய பலத்திலோ **(power)** எந்த விதமான சூட்சுமமும் தென்படுவதில்லை. தாயாரின் முயற்சி மிகச் சிறிய அளவில்தான் நடக்கிறது. அப்படியே நடந்து முடிந்தாலும் அதன் பலன் கெடுதலில் முடிகிறது. ஜேன் அமைதியான, மென்மையான குணம் உடையவளாய், தன் உணர்வுகளை வெளிக்காட்டாத பெண்ணாய் திகழ்கிறாள். லிசி துறுதுறுப்பானவள், கலகலப்பானவள். கேட்பது என்பதோ, நாடுவது என்பதோ அவளிடத்தில் இல்லை.

ஆனால் இக்கதையின் மிகப்பெரிய பரிசு அவளைத் தேடி வருகிறது. மிகச் சிறந்த பண்பாளன் எனும் ஒரு நல்ல குணமே டார்சியின் சூட்சும சக்தியாக விளங்குகிறது.

பொருள் ரீதியாக வாழும் நமது வாழ்க்கை மிகவும் சாதாரணமானது. ஆனால் அதனுடைய உயர்ந்த சிறப்பம்சங்கள், சூட்சும பண்பாட்டின் சிகரத்தில் உறைகிறது. ஒரு தாயார், தன்னுடைய குழந்தைக்குத் தேவையான உணவளித்து, உடையுடுத்தி, எல்லாவித வசதிகளையும் செய்து தருகிறார். அக்குழந்தையைக் கவனித்துக் கொள்ளும் செவிலித் தாயார் அக்குழந்தை ஏங்கும் அன்பு மொத்தத்தையும் அள்ளித் தருகிறார். இந்தக் குழந்தையின் விருப்பம் அச்செவிலித் தாயாராக இருக்குமே தவிர, பெற்றெடுத்த தாயாரிடம் அன்பு இருக்காது.

பத்து பணியாளரை நிர்வகிக்கும் பொறுப்பு என்னுடையதாக இருந்தது. அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதும் நான்தான். என் சொற்களை மீறாமல் நடந்து வந்தனர். ஒரு நாள், முதலாளி ஊருக்குத் திரும்பி வந்துள்ளதாகச் செய்தி வந்தது. வந்தது சூட்சுமமாக இருந்தாலும், அச்செய்தியே அவர்களை மேலும் ஆர்வமாக வேலை செய்ய வைத்தது. விக்காமிற்கு பணம், அந்தஸ்து எதுவும் இல்லாதபோதிலும் அவனுடைய நடத்தை எல்லோரையும் கவரும் வண்ணம் இருந்தது. அவனுடைய

சுயரூபம் வெளிப்படும்வரை மெரிட்டனில் இருந்த அத்தனை பெண்களும் தங்கள் சுயக்கட்டுப்பாட்டிலேயே இல்லை. அவனுடைய கவர்ச்சி அவனுடைய சூட்சுமமாக விளங்கியது.

1930-ஆம் வருடத்தில் ஓர் சமஸ்கிருத பண்டிதர் ஆசிரமத்தில் சேர்ந்தார். அவர் சென்னையில் வசித்த காலத்தில் அவரைச் சுற்றி சில சிஷ்யர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவர் கல்லூரிப் பேராசிரியர். இங்கு வந்ததில், **The Life Divine**-ன் மிகப் பெரிய ஆன்மீகச் சிறப்பு அப்பண்டிதருக்குத் தெரிய வந்தது. ஆர்யா எனும் பத்திரிக்கையில் தொடராக வெளிவந்த போதும், அதனை வாங்க முடியாத நிலையில் அவர் இருந்தார். ஆண்டுச் சந்தா அப்பொழுது எழுபத்தி ஐந்து பைசா. ஒரு மளிகைக் கடைக்காரருக்கு அப்பத்திரிக்கை இலவசமாக கிடைத்து வந்தது. ஆனால் அவருக்கோ அதனைப் படிக்கத் தெரியாது. அப்பதிப்பினை வாங்கி வருவதற்கு அப்பண்டிதர் ஒவ்வொரு முறையும் ஐந்து மைல் தூரம் நடந்து செல்வார். ஆசிரமத்திற்கு வந்தபின் அப்புத்தகத்தின் ஆன்மீக சக்தியினைப் புரிந்து கொண்டார். சென்னையில் இருக்கும் தனது பழைய சிஷ்யர்களும் அதன் பலனைப் பெற வேண்டும் என விரும்பினார். ஒருமுறை தன்னைச் சந்திக்க வந்தவரை நோக்கி புதன்கிழமை தோறும் நடக்கும் **The Life Divine** வகுப்பிற்கு பொன்னுசாமியைப் போய் கேட்கச் சொல்லவும் என்றார். செய்தியும் சென்றடைந்தது. அவர் இறக்கும்வரை அப்பணி தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டது. குருவின் வார்த்தைகள் சூட்சுமமான ஆணைகள். வண்டிக் கயிற்றால் கட்டப்பட்டது போல், சிஷ்யர்கள் ஆணைக்குக் கட்டுப்பட்டவர்கள். பவர் சூட்சுமமானது. சூட்சும பவர் அதிக வலிமையுள்ளது.

உண்மையில் கவிஞர்கள்தாம் சமூகத்தின் தலைவர்கள் எனலாம். நினைவு தெரிந்த நாளிலிருந்து அவர்கள் அரசர்களுடனும், சமூகத்தின் மாபெரும் சக்தியுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். அது அவர்களுக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தது. ஆனால் அப்பெரும் புகழ் அவர்களைச் செல்வந்தர்களாக ஆக்கவில்லை. இது உலகளாவிய உண்மை. நூறாவது முறை ஷேக்ஸ்பியரின் நாடகங்களைப் படித்தாலும்,



அதனுடைய புத்துணர்ச்சி மாறாமல் அப்படியே படிக்க முடிகிறது என ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார். சில படைப்புகளைப் பாராட்டும்பொழுது, ஷேக்ஸ்பியருக்கு நிகராக இருப்பதாக ஷா (பெர்னாட்ஷா) கூறியுள்ளார். புரிவாற்றல் மிக்கவர்களுக்குத் தங்களுடைய வாழ்க்கையில் அமைந்த சந்தோஷமான நேரங்களெல்லாம் கவிதைக்குரிய நேரமாக விளங்கியது புரியும். காதல் வயப்பட்டவருக்கு, வாழ்க்கை கவிதை போலிருக்கும். உற்சாகம் நிறைந்த உள்ளத்திற்கு வயதே ஆகாது. அவர்கள் மேலும் இளமையாகத்தான் திகழ்வர். இனிமையான காதல் உணர்வுடைய ஆண்கள், தங்களுடைய வாழ்க்கையின் பிற்பகுதியில், சில சமயங்களில் தங்கள் மனைவியுடன் உணர்வுபூர்வமான தருணங்களை அனுபவித்திருப்பர். அவை கவிதைக்குரிய நேரமாக விளங்கியிருக்கும். விஸ்வாசமாக இருக்கும் தொழிலாளிகளை, முதலாளிகள் பெரும்பாலும் மறந்து விடுவர். ஓய்வு பெற்ற பிறகு, தாம் மறந்து விட்டிருக்கும் தொழிலாளிகளைச் சந்திக்க நேரும்பொழுது, அவர்கள் காட்டும் மனிதத் தன்மையும், விஸ்வாசமும் அவர்களை நெகிழ வைக்கும்.

வாழ்வின் பிற்பகுதியில் நடக்கும் சம்பவங்கள், ஒருவருடைய ஆழத்தில் புதைந்திருக்கும் பக்தியை வெளிப்படுத்தும் வண்ணம் இருக்கும். மேலும் அவருடைய தைரியத்தை வெளிக்கொண்டுவரத் தூண்டும் வண்ணமுமாகவும் இருக்கும். டான்டே என்பவர் ஹேடிக்கு **(Haydee)** பாதுகாவலராகவும், தந்தையாகவும் இருந்தார். 100 மில்லியன் ஃப்ராங்க் மதிப்புள்ள சொத்தின் உயில் பத்திரத்தைக் கிழித்துப் போட்டது அவளுக்கு அவர்மேல் இருந்த வெளிக்காண்பிக்காத அன்பினை தெரிவிக்கும் வண்ணம் இருந்தது. அவள் பெருந்தன்மை உடையவளாக விளங்கினாள். அவளுடைய உணர்வுகளும் பெருந்தன்மை மிகுந்ததாக இருந்தது. ஊழல் மிக்க ஒரு நீதிபதி தகாத செயல் புரிபவராக மாறியிருந்தார். திருட்டுப் போன வைர நெக்லஸ் அவரிடம் இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. ஆனால் சட்டத்தினால், அவருக்கு இடமாற்றம் என்ற தண்டனையைவிட பெரிய ஒரு தண்டனையை அளிக்க

முடியவில்லை. ஒரு சமயம் அவர் இலஞ்சம் வாங்கிக் கொண்டு ஒருவரை கைது செய்யும் ஆணையைப் பிறப்பிக்கும் மிகக் கொடிய செயலைச் செய்ய நேரிட்டது. பாதிக்கப்பட்டவர், இதற்கு எதிராக இலஞ்சம் கொடுத்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் நிலைமையில் இல்லை. இவருடைய வழக்கறிஞருக்கு மிகவும் கவலையாகி விட்டது. பாதிக்கப்பட்டவரின் நண்பர் ஒருவர், இந்த நீதிபதி ஆதி நாளில் தங்கள் இல்லத்தில் வசித்து வந்ததால், எலிமெண்டரி பள்ளி ஆசிரியரான தன்னுடைய தகப்பனாருக்கு இந்த நீதிபதியிடம் கணிசமான செல்வாக்கு இருந்ததாகத் தெரிவித்தார். இதைக் கேட்ட வழக்கறிஞர் நம்ப முடியாமல், கோபமடைந்தார். இருப்பினும் பாதிக்கப்பட்டவர் இவ்வாசிரியரின் உதவியை நாடினார். கைது செய்யப் பிறப்பிக்கப்பட்ட ஆணை ரத்து செய்யப்பட்டது. இவ்வாறு நிலைமை மாறியதை வழக்கறிஞரால் நம்பவே முடியவில்லை. நீதிமன்றத்தில் இவ்வயதான நபர் இருந்ததால் மட்டுமே, இவ்வளவு பெரிய மாறுதல் ஏற்பட்டுள்ளதா என அவர் ஆச்சரியப்பட்டார்.

மந்திரங்களுக்கு சூட்சும சக்தியுண்டு. அதே பலனைத்தர வல்லது ஸ்ரீ அரவிந்தரின் புத்தகங்கள். தேள் கொட்டிய பூனையை, ஸ்ரீ அரவிந்தருக்கு முன்னால் ஒரு மேஜைமீது, அன்னை அமரச் செய்தார். இருபது நிமிடங்கள் கழித்து விஷத்தன்மை முற்றிலும் நீங்கி அப்பூனை குதித்து ஓடியது. ரோமாபுரி தேவாலயத்தில், மண்டியிட்டு பிரார்த்தனை செய்து கொண்டிருக்கும் ஓர் அம்மையாரை, எட்டுக்கால் பூச்சி போல் தோற்றமளித்த ஓர் கெட்ட ஆவி அவருடைய சக்தியினை உறிஞ்சிக் கொண்டிருந்ததை அன்னை பார்த்தார்.

சிறு தெய்வ வழிபாடு கூடாது என இராமலிங்க சுவாமி கூறியுள்ளார். பிரபலமாக இருக்கும் கோயில்கள் அனைத்திலும், முதலில் பிரதிஷ்டை செய்யப்பட்ட முருகரும், கிருஷ்ணரும் இப்பொழுது முதன்மையாக இல்லை. நாளாக ஆக கோயிலில் வழிபட வரும் பக்தர்களின் உணர்வுகளுக்கேற்ப, அவர்களுடைய உணர்வுகளைத் திருப்திப்படுத்தும் வகையில் சிறு தேவதைகளே கூட்டம் கூட்டமாக வசிக்கின்றன. அவை ஒரு



பிரார்த்தனையைப் பூர்த்தி செய்து கொடுத்து நம்பிக்கையை ஏற்படுத்தி விடுகின்றன. பிறகு, பக்தர்கள் தங்களை விட்டுப் போய்விட்டால் அவர்களைத் தண்டிக்கின்றன. கல்வி அறிவு உயர்ந்து விளங்கும் ஐரோப்பிய நாட்டு மக்களும் இம்மாதிரியான வழிபாட்டிற்கு அதிக அளவில் பலியாகின்றனர்.

கணவரின் உயிரைக் காப்பாற்றும் சூட்சும சக்தியான மாங்கல்ய பலத்தைப் பற்றி நான் பல முறை வலியுறுத்தி வருகிறேன். மீன் பிடிப்பவரின் சமுதாயத்தில் இதனை முற்றிலுமாகக் காணலாம். இதுவே அவர்களை நேர்மையாகவும் இருக்க வைக்கிறது.

ஒரு ஸ்தாபனத்தை உருவாக்கியவரே, அந்த ஸ்தாபனத்தின் உயிராகவும் விளங்குவார். அவரே அந்த ஸ்தாபனத்தின் ஆன்மா என்றால் மிகையாகாது. தன்னுடைய உள்ளத்தையும், உயிரையும் அவ்விடத்திற்கு அவர் அளிப்பார். ஒரு விடுதிப் பெண்ணால் தொடர்ந்து ஆதரிக்கப்பட்ட பீட்டர் என்ற பேரரசரை அவ்விடத்தின் ஆன்மா அவரை ஓர் பெண்ணாகவே பேணுகிறது. பின்னால், அவ்விடத்திற்கு ஒரு பெண்மணியே வந்து வசிப்பது இதனை உண்மை எனக் காண்பிக்கிறது. எல்லா பழைய பண்பாட்டு முறைகளிலும், இந்தச் சூட்சும வாழ்வின் பலதரப் பட்ட கோணங்கள், அவைகளுக்குத் தகுந்தவாறு உருவாகியது. இதில் ஒன்று என்னுடைய தனிப்பட்ட கவனத்திற்கு வந்தது. அடக்கம் செய்வது என்பது கிறித்துவ சம்பிரதாயத்தில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும். உயிலில்கூட அதைப் பற்றி ஒரு பகுதி எழுதப்பட்டிருக்கும். நம்முடைய பழைய நம்பிக்கைக்கு மாறாக ஸ்ரீ அரவிந்தர் இந்தியாவின் ஆன்மீகத் தன்மையைப் பற்றிப் பேசுகிறார். இந்தியர்கள் மற்றவர்களைக் காட்டிலும் ஆன்மீகத்தில் உயர்ந்தவர்கள் என்பது நம்முடைய பரவலான அபிப்பிராயம். பகவானோ இதை மறுக்கிறார். ஆன்மாவைப் பொறுத்தவரையில் இந்தியர்களும் மற்றவர்களைப் போல்தான் என்று கூறுகிறார். ஆனால் இந்த மண் ஆன்மீக பலம் கொண்ட ஆன்மீகத் தன்மையால் நிரப்பப் பட்டுள்ளது என்கிறார். அப்பல்லோ பந்தரில் அவர் அனுபவித்த பேரமைதியும், அமெரிக்க அன்பர், இந்தியாவின்

சுவாசக்காற்றில் உணர்ந்த அமைதியும் நமக்கு நன்றாகத் தெரியும்.

ஆன்மீகத்தைத் தேடி இந்தியாவிற்கு வரும் மேல்நாட்டார், அதனை இந்தியர்களிடம் தேடாமல், இந்திய மண்ணில்தான் தேடுகிறார்கள். இந்தியாவில் ஆன்மீகம் நேர்த்தியாக நிறுவப்பட்டு, இந்திய மண்ணில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. அதற்குமேல் அது எழும்பவில்லை என்று பகவான் கூறுவதாக எடுத்துக் கொண்டாலன்றி வேறு எப்படி எடுத்துக் கொள்வது என்று எனக்குப் புரியவில்லை. ஆங்கிலேயரால் காப்பாற்றப்பட்ட இந்தியாவின் எல்லை ஒற்றுமை எவ்வாறு பாகிஸ்தானால் அழிக்கப்பட்டதோ, அதே போல் பாகிஸ்தான் எனும் நாடு மறைந்து, இம்மண் ஜடத்தன்மையிலிருந்து முதிர்ச்சி பெற்று உயருவதற்காக மட்டுமே இந்திய ஆன்மா காத்துக் கொண்டிருக்கிறது என்று என்னால் பொருள் கொள்ள முடிகிறது. இந்தியாவின் நிலைமை எப்படி இருந்தாலும், கிறித்துவ மதத்தின் புதைப்பது என்பதன் முக்கியத்துவம் வேறு விதத்தில் செயல்படும். எனக்குத் தெரிந்த ஒரு ஸ்தாபனத்தை நிறுவிய ஒரு பாதிரியார், தன்னை வளர்த்த நிறுவனத்தின் குறிக்கோளுக்கு எதிராக, தன்னுடைய ஆற்றலாலும், சிரத்தையான உழைப்பாலும் அதனை வளர்த்தார். ஆனால் அவர் ஓய்வு பெறுவதற்குமுன் ‘புதைப்பது’ எனும் கிறித்துவப் பழக்கம் அவரை ஆட்கொள்ள ஆரம்பித்தது. அதனால் தன்னுடைய கல்லறையை அவரே கட்ட ஆரம்பித்தார். வாழ்வின் எதிரொலியாக, குழந்தை போல் பாவித்து வந்த அவர் நிறுவிய ஸ்தாபனத்திலிருந்து அவர் விலக்கப்பட்டார். அவர் கட்டிய கல்லறை அவருடைய குறிக்கோளிற்குக் கல்லறையாக அமைந்தது.

சூட்சும உலகமும், அதனுடைய சட்டங்களும் அன்பர்களின் வாழ்வில் முக்கியமாக பாதுகாப்பிற்குத்தான் முனைப்புடன் செயல்படுகிறது. ஆசிரமத்திற்கு முதன்முதலாக அழைக்கப்பட்ட ஒருவர், பாண்டிச்சேரி செல்வதற்காக, பேருந்து நிலையத்திற்குச் சென்றார். பேருந்து நிலையத்தில் திருவிழாக் கூட்டம், கார் சவாரி என்பதே தெரியாமல் இருந்த சுமார் ஐம்பது



ஆண்டுகளுக்குமுன், அவருக்குப் பாண்டி செல்ல கார் ஏற்பாடு செய்யப்பட்டது. அன்னையின் சூழல் செயல்படும் விதம் இப்படித்தான் இருக்கும். அந்த கிறித்துவ பாதிரியாரின் ஸ்தாபனத்தில் இந்த அன்பர் மட்டுமே உண்மையாக இருந்தவர். பாதிரியாரின் சேவையைப் பாராட்டும் வெள்ளி விழாவினை பயன்படுத்திக் கொண்டு அன்பரை வேலை நீக்கம் செய்ய, பொறாமை பிடித்த சிலர் செயல்பட்டனர். தனக்கு இஷ்டம் இல்லாமலேயே பாதிரியார் அவ்வலைக்குள் சிக்கிக் கொண்டார். அன்பர்களைச் சுற்றி தங்கக் கவசம் போல் அமைந்திருக்கும் பாதுகாப்பு வளையத்தைப் பற்றி அவருக்கு எப்படி தெரிந்திருக்க முடியும்? வாழ்வின் சட்டம் இங்கு செயல்பட்ட விதம், உண்மையாக வேலை செய்த ஒருவரை மிகவும் சங்கடத்திற்குள்ளாக்கியது. மேலும் சிரத்தையாகக் கட்டிக் காப்பாற்றிய தன் முப்பது வருட உழைப்பை அழிக்கும்படியும் நேர்ந்தது. சூட்சுமம் ஜடத்தைக் கடந்த சக்தி வாய்ந்தது.

ஒருவர், தான் உடற்பயிற்சி செய்யும்பொழுது, **kindle** என அழைக்கப்படும் உபகருவி மூலம் புத்தகங்கள் படிப்பதை வழக்கமாக்கி விட்டிருந்தார். ஒரு நாள் அவர் எப்பொழுதும் வைக்கும் இடத்தில் அந்த **kindle**-ஐக் காணவில்லை. தேடியபொழுது, அது அவர் உடற்பயிற்சி செய்யும் மெஷினின் அருகில் இருந்தது. எவரோ அங்கு கொண்டு வந்து வைத்திருக்க வேண்டும் என அவர் எண்ணினார். ஆனால் அவருடைய படிக்கும் ஆர்வத்திற்கு மதிப்பு அளிக்கும் வகையில் சூழல் செயல்பட்டு சூட்சுமமாக அக் **kindle**-ஐ அங்கு கொண்டு வந்து வைத்தது என்பதை அவர் உணரவில்லை. இதற்கு முன்னால் என்னுடைய எழுத்துகளில், எப்படி ஒரு பணப்பை, பாஸ்போர்ட்டுடன், அன்பரின் பிரார்த்தனைக்குக் கட்டுப்பட்டு புல்வெளியில் கிடைத்தது என்பது பற்றி குறிப்பிட்டு இருக்கிறேன். ஆனால், எவ்வாறு சூட்சும சக்தி செயல்பட்டு, அந்த இடத்தில் பணப்பையைக் கொண்டு வந்து சேர்த்தது என்பதனை படித்தவர்கள் அனைவரும் உணரத் தவறி விட்டனர்.

இலக்கு இல்லாமல் இருப்பதைவிட ஒரு குறிக்கோளோடு வாழ்வது உயர்ந்தது. சாதாரண வாழ்க்கை பொருள் ரீதியாக

இருக்கும். குறிக்கோளோடு வாழும் உயர்ந்த வாழ்க்கை சூட்சுமமாக இருக்கும். ஆனால் உண்மை என்னவென்றால், இவ்வுயர்ந்த வாழ்க்கைக்கும் பொருள் பலம் இல்லாமல் முடியாது. குடும்பம், கட்சி, ஸ்தாபனம், அரசு என எல்லா-வற்றிற்கும் இது பொருந்தும். ஆன்மீக வாழ்விற்கு இது பெரிய அளவில் உண்மையாக உள்ளது. ஓர் ஆன்மீகவாதியோ அல்லது ஒரு குற்றவாளியோ அவர்களுடைய இறுதிக் காலத்தில் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தனர் என்பது நாம் கேள்விப்படாதது. எந்த உயர்ந்த வாழ்வும், வெற்றி பெறுவதற்கு அடிப்படையாக பொருள் நீதியிலும் முன்னேற்றம் அடைந்திருக்க வேண்டும் என்ற உண்மையைத்தான் இது வலியுறுத்துகிறது.

பிரபலத்தை அளக்கலாம், ஆனால் புரிந்து கொள்ள முடியவில்லை. வாழ்வின் குணத்தைப் பொறுத்து சூட்சுமம், gross, பொருள் இவை மூன்றும் கலந்து இருக்கும். வாழ்க்கையை புரிந்து கொள்ளாதவரால், பிரபலத்தையும் புரிந்து கொள்ள முடியாது. வாழ்க்கை ஒரு கண்ணாடி எனும் சொற்பதத்தைக் கண்டுபிடித்தவர் ஷேக்ஸ்பியர். அவருடைய நாடகங்களில் இதனை வெளிப்படுத்தினார். உலகம் முழுவதிலும் அவருடைய எழுத்துக்கள் படிக்கப்பட்டிருந்தாலும், இரண்டு நூற்றாண்டு-களாக, அவர் இங்கிலாந்தில் மறக்கவும்பட்டிருந்தார். சூட்சும வாழ்க்கையிலும், ஜட வாழ்க்கையிலும் பிரபலத்திற்கு என்ன வேலை இருக்கிறது. பிரபலத்தில்தான் சூட்சுமமும் (materiality), ஜட வாழ்க்கையும் சரியான விகிதத்தில் கலந்திருக்கும். உண்மைக்குள் எல்லா உயர்ந்த ஞானமும் இருக்கும். இதுதான் சூட்சுமத்தின் உச்சக்கட்ட ஞானமும் ஆகும். வியாசருக்கு மகாபாரதக் கதையை எழுத ஒருவர் தேவைப்பட்டார். தான் எழுதும் வேகத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் செய்யுள்களை உரைக்க வேண்டும் என்ற ஒப்பந்தத்திற்கு விநாயகப் பெருமான் எழுத முன்வந்தார். தெய்வ லோகத்திற்குரிய தெய்வம் விநாயகர். அந்நிலைக்கு வாழ்வு கட்டுப்படவில்லை. சத்திய ஜீவிய அளவில் மட்டுமே வாழ்வு கட்டுப்பட்டு வந்தது. சத்திய ஜீவியத்தில் வாழ்வின் ஒரு துளி சக்திகூட வீணாகப் போகாது. இயற்கையில் விரயமே கிடையாது. விரயம் என்பதே இல்லை



எனும்பொழுது எல்லா சக்தியும் சேர்ந்து பூரணமாக ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகிறது. அந்நிலையில் விநாயகர் இல்லை. சத்திய ஜீவிய நிலையில் பிறந்தாலும், வாழ்வது தெய்வ லோகத்தில்தான். வியாசர் ரிஷி என்பதால் ஒரு வகையில் விநாயகரையும் மிஞ்சும் நிலை பெற முடியும். தான் சொல்வதைப் புரிந்து கொண்டு எழுத வேண்டும் என்று வியாசர் வலியுறுத்தினார். ஆதலால், எழுத முன்வந்த விநாயகப் பெருமானால் ஜெயிக்க முடியவில்லை. மகாபாரதத்தில் சூட்சும உண்மைகளை ஜட எழுத்து வெளிப்படுத்துகிறது.

தீமைக்கு எதிராக நடத்திய தர்ம போர்தான் மகாபாரதக் கதை. பவர் இருப்பது தீமையின் அணியில். இப்பக்கம் இருந்த துரோணாச்சாரியாரிடம் தீர்மானிக்கும் பவர் (சக்தி) இருந்தது. கௌரவ அணியின் மூதாதையரான பிதாமகர் பீஷ்மரும் அவர் அணியில்தான் இருந்தார். தர்மம் ஆட்சி புரிந்த பூமி அது. சக்தி, சொத்து, பணபலம், சட்டம், நீதி எல்லாமும் தவறான பக்கத்தில் சேர்ந்து விட்டிருந்தது. மனித சுபாவத்தின் கலாச்சாரம், பண்பாடு, மரியாதை இவைகளே நேர்மையான அணி தோற்பதற்கு வழி வகுத்தன. சூதாட்டத்தில் தருமருக்கு மிகுந்த நாட்டம் இருந்தது. சகுனியிடம் மந்திர தாயம் இருந்தது. இவற்றிற்கு இடையே, எல்லாம் தோற்றுப்போனது. இதுதான் வாழ்வின் சுபாவம், சூட்சும வாழ்வின் சுபாவமும் கூட. பரமபதம் போல் சூட்சும வாழ்க்கை, ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்குக் கொண்டுபோய் சேர்க்கும் திறனுடையது. தர்மம் அவர் தலையைக் காக்கவில்லை. பின்னர் எவ்வாறு அவர்கள் காப்பாற்றப்பட்டனர்? நம்ப முடியாத அளவிற்கு, நம்மால் ஜீரணிக்க முடியாத அளவிற்கு ஏதோ ஒரு சூட்சுமம் செயல்பட்டு எல்லோரையும் காப்பாற்றியது. அது பக்தி. திரௌபதிக்கு கிருஷ்ணர் மேலிருந்த அசைக்க முடியாத நம்பிக்கை, கடவுளிடம் இருந்த பக்தி எல்லோரையும் காப்பாற்றியது. பக்தி சூட்சுமமானது. பூஜை ஜடமானது. ஜடமான பூஜைக்கு பலனளிப்பது சூட்சுமமான பக்தி. சூட்சும தொடர்புகள் எவ்வாறு முன்னணிக்கு வருகின்றன என நமக்குத் தெரியாது. வயலைச் சுற்றி வரும்பொழுது, ஒரு பகுதியினை கவனிக்கத் தவறி

விட்டால் அவ்வயல் பகுதி எவ்வாறு வருத்தப்படும் என்பதை ஒரு விவசாயியாவது புரிந்து கொண்டார்.

இந்துக்களை அழிக்கும்படி ஆகஸ்ட் 16, 1946 அன்று முஸ்லீம்களுக்கு, ஜின்னா ஓர் அழைப்பு விடுத்தார். கல்கத்தாவில் அப்பொழுது முக்கிய மந்திரியாக இருந்தவர் ஒரு முஸ்லீம். அவர் ஆவேசத்துடன் செயல்பட ஆரம்பித்தார். சட்டமும் உள்நாட்டுப் பிரச்சனை ஆகும். எல்லைப் புறத்தில் நடப்பது போர். ஒரு நாடு தாக்கப்பட்டால் எல்லோரும் எழுந்து எல்லையைக் காக்க முற்படுவர். உள்நாட்டுக் கலகம் என்பது வேறு ஒரு பரிமாணம் ஆகும். நாட்டைக் காக்க நாட்டுப் பற்று எழுந்து நிற்கும். மனித குலத்தின் அல்ப குணம், சமூக சச்சரவில் தன்னையே ஈடுபடத் தூண்டுகிறது. இன உணர்வு-களை தட்டி எழுப்பி, தலைவர்கள் மனித சக்தியைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர். காவல் துறை என்பது கட்டுக்கோப்பான ஒரு கூட்டமைப்பு ஆகும். இராணுவம் இதனினும் ஒருபடி உயர்ந்தது. நம் நாட்டுத் தலைவர்களுக்கு எதிராக இந்தியக் காவல் துறை மிகத் துல்லியமாக தங்களுடைய ஆணைகளை செயல்படுத்துகிறது என்பதை ஆங்கிலேய ஆட்சி புரிந்து கொண்டது. இது ஒரு சாதாரண பயிற்சி அல்ல. ஆனால் ஆழமான இன உணர்வுகள் தூண்டப்படும்பொழுது, நாடு முழுவதும் மக்கள் கொதித்து எழும் சமயம் போலீஸுக்கு அளிக்கப்பட்ட பயிற்சியும் பயனற்றுப் போய் விடும். இந்துக்கள் நிறைந்த காவல் துறை இஸ்லாமிய கலவரவாதிகளைச் சுட்டுத் தள்ளியதே தவிர இந்துக்களை அல்ல. அவர்களை நம்ப முடியாத நிலைமை ஏற்பட்டது. இராணுவ அதிகாரிகள் பாரபட்சம் பார்க்காது செயல்பட்டனர். ஏனெனில் இவர்களு-டைய பயிற்சி மேலும் ஆழமானது.

காவல் துறைக்குமேல் ரிஸர்வ் போலீஸ் உண்டு. இதற்கும்-மேல் சிறப்பு போலீஸ். இந்தச் சிறப்பு போலீஸில் புகழ் பெற்றது மலபார் போலீஸ். இப்போலீஸ் துறை தீவிரவாதிகளைக் கதிகலங்க அடித்தது. போலீஸ் துறை தோற்றது என்ற பேச்சிற்கே நிர்வாகத்தில் இடம் இருந்ததில்லை. வங்காளத்தில்



இப்போலீஸ் ஏமாற்றி விட்டது. இராணுவத்தை நியமித்த-தினால், நிலைமையைக் காப்பாற்ற முடிந்தது. அரசியலில், அஹிம்சையை நம் நாடு பின்பற்றியது. உச்சகட்டத்திற்கும் எடுத்துச் சென்றது. வாழ்வு மிகவும் விழிப்பானது. மனிதன் வாழ்வுக்கு எதிராகத் திரும்பினால் அது வேறு பக்கமாக செயல்பட ஆரம்பிக்கும். நம்முடைய மேல்மனத்தின் அடியிலுள்ள ஆழ்மனத்தில் அது தன்னை ஒழுங்குபடுத்திக் கொள்ளும். போலீஸ் அதிகாரிகள் வெற்றிக் களிப்பில் இருந்தனர். தெருவில் நடந்த கலவரம் தீவிர போர் போலத்தான் காட்சியளித்தது. போலீஸ், கலவரத்தை அடக்க முடியாமல் போனது ஏமாற்றமாகத்தான் இருந்தது. சில நிமிடங்களில் இராணுவம் வந்து அமைதியை நிலை நாட்டியது. இச்செயல் இராணுவ அதிகாரிகளுக்கு வாழ்நாளில் கிடைக்காத திருப்தியைத் தேடித் தந்தது.

உணர்ச்சிக் கொந்தளிப்பு உச்சத்தில் இருந்தது. அதை இராணுவம் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. வகுப்புவாதம் எனும் பெயரில் அப்பொழுது வெறித்தனம் அதிகமாக இருந்தது. போலீஸ் துறையைப் போலவே இராணுவமும் சட்ட ஒழுங்கைக் காக்கும் அதிகாரிகளை ஏமாற்றி விட்டது. எல்லோரும் தங்கள் இஷ்டத்திற்கு செயல்பட ஆரம்பித்தனர். மீண்டும் மீண்டும் கலவரம் வெடித்தது. கல்கத்தாவில் அன்று இராஜாஜி கவர்னராக இருந்தார். வெறிபிடித்தவர்களின் கூக்குரலைக் கேட்டு காந்திஜீ செயலில் இறங்கினார். இந்நிலைமையைத் தன் கைகளில் எடுத்துக் கொண்டார். உண்ணாவிரதத்தைத் தன் ஆயுதமாக்கினார். கூட்டத்தின் வெறித்தனத்தைக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வர தன்னுடைய ஆன்மாவைப் பரிசுத்தமாக்க முயன்றார். அவருடைய அத்தள்ளாத வயதில் அவர் மிகவும் பலஹீனமாக இருந்தார். மோசமான நிலையில் இருந்த நாட்டிற்கு, அமைதியைவிட அவருடைய உயிர் மிகவும் விலைமதிப்-பற்றதாகத் தோன்றியது. கலவரத்தை அடக்க முடியாமல் அவர் இறக்கவும் நேரிடலாம். அப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்திருந்தால் நாம் ஒரு பெரிய ஆன்மாவை இழந்திருப்போம். உண்ணாவிரதம்

இருக்க வேண்டாம் என்று அவரைச் சுற்றியிருந்த அனைவரும் அவரை மன்றாடிக் கேட்டுக் கொண்டனர்.

ஆனால் அவர் அதற்கு இணங்கவில்லை. உண்ணா-விரதத்தைத் தொடங்கினார். இந்து தர்மத்தில் அஹிம்சை ஓர் அரசியல் ஆயுதமாகப் போற்றப்படவில்லை. ஆச்சரியப்படும் வகையில் கலவரம் எனும் அலை அடங்கியது. மூன்று நாட்களிலேயே அவ்வூர் சகஜ நிலைக்குத் திரும்பியது. அஹிம்சை, ஹிம்சையைக் காப்பாற்றியது. அரசியல் சாசனம் எழுதுவதற்கு ஆலோசகராக பர்மா அரசு B.N. ராவ்வை அழைத்திருந்தது. வழியில் அவர் ராஜ்பவனில் தங்கினார். அப்பொழுது கலவரத்தை எவ்வாறு காவல்துறை வெற்றிகரமாக அடக்கியது என்பதைப் பற்றி பெருமையாக அவருக்கு விளக்கினார் அன்றிருந்த இன்ஸ்பெக்டர் ஜெனரல். பர்மாவில் தனக்கு இட்ட பணியினை முடித்து விட்டு சில மாதங்கள் கழித்து ஊர் திரும்பிய B.N.ராவ் மீண்டும் ராஜ்பவனில் தங்கியபொழுது அதே இன்ஸ்பெக்டர் ஜெனரலைச் சந்திக்க நேர்ந்தது. போலீஸும், இராணுவமும் தோற்றுவிட்டன. எல்லா அதிகாரங்களும் மோசமாக தோற்றுப்போயின. இந்தத் தடவை தனிமனிதனாக காந்திஜீதான் நிலைமையைக் காப்பாற்றினார் என்று அவர் கூறினார். சூட்சுமம் சக்தி வாய்ந்தது.

சில மனிதர்கள் உலகம் முழுவதும் சுற்றுவார்கள். இவர்கள் தங்களுக்கென்று ஒரு தனித்தன்மையை உருவாக்கிக் கொள்வர். ஆனால் அதற்கு வேர் இருக்காது. மற்ற சிலரோ தங்களுடைய ஊரைவிட்டே வெளியே சென்றிருக்க மாட்டார்கள். பூமித்தாயிடமிருந்து தங்களுக்கு வேண்டிய சக்தியைப் பெற்றுக் கொள்வார்கள். இது நிஜம். வாலியை எதிர்ப்பவர்களுக்கு அவர்களுடைய பாதி பலம் வாலிக்குச் சென்று விடும். அதனால் வாலியை யாரும் ஜெயிக்க முடியாது. தனக்கு வேண்டிய பலத்தை சூட்சும சூழலிலிருந்து அவர் பெற்றுக் கொள்வார். உள்ளூர்தலைவர்களையும் அவர்களுடைய சொந்த மண்ணில் யாராலும் வெல்ல முடியாது. கைப்பற்றும் எண்ணத்துடன் ஓர் இடத்தில் நுழைபவர்கள், உள்ளூர் மக்களை தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்வதை வழக்கமாக



வைத்துக் கொண்டிருந்தனர். ஒருவரது தேசியக் கொடியும், சக்தி அளிக்கும் அடையாளச் சின்னமாக விளங்கி வந்துள்ளது.

தன்னைத் திருமணம் செய்து கொள்ள முடியுமா என்ற நேரடியான கேள்விக்கு உடனே மறுப்புத் தெரிவித்தவள் எலிசபெத். அதனை அடுத்து இழிவான நிந்தனையும் தொடர்ந்தது. ஒரு சமயம் பிம்பெர்லியை பார்க்கச் சென்றிருந்தாள். வெகு தொலைவிலிருந்தே அக்கற்கட்டடம் அவளிடம் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. சூட்சும கட்டத்தில் அவள் அவ்வாசைக்கு அடி பணிந்தாள். பிம்பெர்லிக்கு எஜமானியாவது மிகப்பெரிய விஷயம் என்று தனக்குள் கூறிக் கொண்டாள். அவ்வீட்டைச் சுற்றிப் பார்த்தது, அதனை பராமரிக்கும் பணியாளரின் புகழுரை, அங்கிருந்த வீட்டுச் சாமான்களின் நேர்த்தி, ரசனை எல்லாமுமாகச் சேர்ந்து அவள் மனதை மாற்றியது. முணுமுணுப்பு, உள் மனக்குரலாக மாறியது. பிம்பெர்லியை தனதாக ஏற்றுக் கொள்ள முடிவு செய்தாள். அம்முடிவு, அதன் எஜமானனை அங்கு வரவழைக்கும் அளவிற்குச் சக்தி வாய்ந்ததாக இருந்தது.

நமக்கு உலக சரித்திரம் தெரியும். சரித்திரம் என்றாலே நமக்கு அரசரும் அவர்கள் புரிந்த போர்களும்தான் தெரியும். ஆனால் இதற்கெல்லாம் மேலாக, நமக்குப் புரிவாற்றல் இருந்தால், இவையெல்லாம் நாகரீகம் முன்னேற்றமடைவதற்குச் சூட்சும சக்தியாக விளங்கியது எனத் தெரிந்து கொள்ளலாம். எண்ணங்கள், கலாச்சாரம், குறிக்கோள் இவைகளின் பலத்தினால்-தான் சமூகம் நிலைத்து வளர்ந்தது. எண்ணங்கள் மறைந்ததி-னாலேயே உலகத்திற்கு கிரீஸ் எனும் நாடு கிடைக்காமல் போய் விட்டது. நிலைத்து நிற்கக்கூடிய அடிப்படையான பண்பு-களினால் மட்டுமே ஒவ்வொரு கலாச்சாரம் மற்றும் பேரரசின் வீழ்ச்சியையும், எழுச்சியையும் பார்க்கிறோம். நமது பாரம்-பரியத்தில் உயர்ந்த பண்புகளைப் பற்றி வெளிப்படையாகப் பேசப்படவில்லை. சூட்சுமமாக அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. பெரிய சொத்தினைத் தன் மகனுக்கு அளித்த தகப்பனார் இரண்டு விஷயங்களைப் பற்றி அவனிடம் எடுத்துரைத்தார். எப்பொழுதும் நிழலில் நட, நீ செல்லும்

ஒவ்வொரு ஊரிலும் தர்ம சத்திரம் கட்ட வேண்டும் என்றார். தகப்பனார் இறந்தபின் அவர் கூறியதை செயல்படுத்த விரும்பினார் அவரது மகன். அக்கூற்றின் உண்மையான பொருள் என்ன என்று ஆராய்ந்து அதனுடைய சூட்சுமமான உண்மை என்ன என்று கண்டுபிடித்துச் செயல்படுத்த வேண்டும் என்று ஒருவர் அறிவுரை வழங்கினார். பிரயாணம் செய்யும் நேரம் விடியற்காலையாகவும், மாலை நேரமாகவும் இருக்க வேண்டும் என்பதும், எவ்வாறு தர்ம சத்திரத்தில் சௌகரியமாகவும், தயங்காமலும் தங்க முடியுமோ அதே போல் தங்கும் அளவிற்குச் செல்லும் இடங்களிலெல்லாம் நண்பர்களை தேடிக்கொள்ள வேண்டும் என்பதும்தான் அவ்விரண்டு விஷயங்களின் அர்த்தம் ஆகும்.

பெண்களுடன் சுற்றுபவர்களைக் கண்டால் எவருக்கும் பிடிக்காது. அவர்கள் பெண் பித்தர்களாக, தவறிழைப்பவர்களாக இருப்பார்கள். எல்லாத் தடைகளையும் தாண்டி இன்னமும் இவ்வெறுக்கத்தக்க பழக்கம் நம் சமூகத்தில் வேரூன்றி உள்ளது. மிகத் தெளிவாக இருக்கும் இவர்களது ஆயுட் காலத்தைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் ஒளிவு மறைவில்லாமல் இருக்கும் இதுபோன்ற நபர்களின் ஆயுள் கண்டிப்பாக நீடிக்கிறது என்பதுதான் சூட்சுமமான உண்மை. தவறிழைக்கப்பட்ட, அத்துமீறி நடத்திய, அவதூறு இழைக்கப்பட்ட பெண்மணிகள் யாவருக்கும் எங்கோ ஆழத்தில் நிறைவு ஏற்படுகிறது. ஆழத்தில் உறையும் அவர்களுடைய கள்ளத்தனமான உணர்ச்சிகள் யாவும் திருப்தி அடைகின்றன. சமூக ரீதியாகவும், தார்மீக ரீதியாகவும் பங்கப்படுத்தப்பட்ட அவர்களது ஜட உடலின் ஆசிகளே, அக்குற்றவாளிகளின் ஆயுளை நீட்டிக்கிறது. சூட்சும காரணம், உண்மையானது. அது மிகவும் சக்தி வாய்ந்தது. ஆனால் இது ஒரு தவறான உதாரணம்தான். ஷேக்ஸ்பியர் எழுதியது போல், துன்பவியலிலும், எதிர்மறையான தன்மையுள்ள வாழ்விலும்தான் ஆழமான உண்மைகள் வெளிக்கொண்டு வரப்படுகின்றன.

முற்றும்

★★★



**அன்னை இலக்கியம்**

## நல்லதோர் வீணை செய்து

(சென்ற இதழின் தொடர்ச்சி)

இல. சுந்தரி

படப்பிடிப்பு நடக்குமிடம் தீவிரமடைகிறது. முக்கியமான கட்டம். தாய் தன் மகள்மீது பாசம் பொழியும் பாவத்தை கதாநாயகி சுமதி வெளிப்படுத்தப் போகும் காட்சி.

“உச்சிதனை முகந்தால் கருவம் ஓங்கி வளருதடீ
மெச்சி உனை ஊரார் புகழ்ந்தால் மேனி சிலிர்க்குதடீ”

என்ற பாரதியின் பாடல் வரிகளை இசையரசி ஒருவர் பாடும் கேசட் போடப்படுகிறது.

டேக் சொன்னவுடன் சுமதி, படத்தில் தன் மகளாக நடிக்கும் பதினான்கு, அல்லது பதினைந்து வயது மதிக்கத்தக்கப் பெண்ணை, அவள் பள்ளியில் பரிசும், பாராட்டும் பெற்று வரும் நேரம் உச்சி முகந்து தன்னுள்ளத்துப் பாசத்தைப் பெருமிதத்தை வெளிப்படுத்தும் காட்சியை நடிக்க ஷூட்டிங் நடந்தது. ஒரே டேக்கில் ஓ.கே ஆயிற்று. தத்ரூபமாய் இருந்தது.

சூழ நின்றவர்கள் அனைவரும் நெகிழ்ந்து போய் பாராட்டினர். சுமதி மெல்ல தன் கண்கள் கலங்குவதை கர்சீப்பால் நாகரிகமாய் மறைத்தாள். எத்தனை அற்புதமான நடிப்பு? நடிப்புக் கலைக்கென்றே பிறந்தவர் என்று மெல்ல விமர்சித்துக் கொள்கின்றனர்.

ஆனால் அவள் தனக்குள்ளே தன் மகள் ஆர்த்தி பள்ளியிலிருந்து பரிசுகளுடன் வருவதாய் மானசீகமாய்க் கற்பித்துக் கொண்டு உண்மையாகவே பாசத்தால் உருகினாள் என்பது ஒருவருக்கும் தெரிய வாய்ப்பில்லை .

‘நெஞ்சைத் தொட்டு விட்டாயம்மா’ என்கிறார் மூத்த கலைஞர் ஒருவர். போலியாய்ப் புன்னகைத்தாள். இல்லை நான் நடிக்கவில்லை. என் ஆர்த்தியை நான் மிகவும் நேசிக்கிறேன். நிஜ வாழ்வில் கிட்டாத அந்த இன்பத்தைத்தான் இங்கு உண்மையில்

வெளிப்படுத்தினேன். இங்கு மகளாக நடித்த பெண்ணுக்குள் நான் என் ஆர்த்தியைத்தான் பார்த்தேன். பாசத்தால் உருகினேன். நடிப்பில்லை இது உண்மை என்று வாய்விட்டுக் கதற வேண்டும் போலிருந்தது.

ஆனால், ஆர்த்தியைப் பற்றியோ, அவளுக்குத் தன்னுடன் உள்ள பிணக்குப் பற்றியோ இதுவரை வெளியில் தெரியாமல் நடந்து வந்திருக்கிறாள். தப்பித் தவறிக் கூட பேட்டியில் அவளைப் பற்றி கூறுவதில்லை. புகைப்படம் எடுக்கவும் அனுமதித்ததில்லை.

ஷூட்டிங் முடிந்து சென்னை திரும்பிக் கொண்டிருந்த திரைப்பட நடிகை சுமதியின் உள்ளம் தன் அருமை மகள் ஆர்த்தியைக் காணத் துடித்தது. ஓடிப்போய் தன் செல்வ மகளைக் கட்டித் தழுவி உச்சி முகந்து கருவங்கொள்ளத் துடித்தது. ஆனால் ஆர்த்தியின் பாராமுகம் நினைத்து சோர்வு வந்தது. தான் அவள் அருகில் சென்றாலே விலகியோடும் மகளைச் சமாதானப்படுத்த முடியவில்லை.

கரிய பெரிய விழிகளும், வில்லெழுதிய புருவமும், கோவைக் கனிபோன்ற இதழ்களும், மாந்தளிர் மேனியும் கொண்டு பதுமை போன்ற தன்மகள் — இரக்கமும், அன்பும் நிறைந்த தன்மகள் தன்னைமட்டும் வெறுத்து ஒதுக்கும் துன்பம் எண்ணி வருந்தினாள். அவள் எவ்வளவுதான் தன்னை வெறுத்து ஒதுக்கினாலும், தன்மனம் அவள்மீது தணியாத பாசம் கொண்டு தவிப்பதை அவள் ஏன் உணர்வதில்லை?

பற்றற்ற துறவிபோல் வாழும் தன்மகளுக்குத் தன்னை ஏறெடுத்தும் பாராத தன்மகளுக்கு இப்போதும் அணிமணிகளும், ஆடைகளும் வாங்கியிருந்தாள். இவற்றையெல்லாம் ஒரு பொருட்டாக மதியாமல், அவள் தன்னைக் காணவே பிடிக்காமல் திரும்பிக் கொள்வாள் என்று பலமுறை அனுபவித்த அனுபவம் இருந்தும், இம்முறையாவது மனம்மாறி தன்னன்பை ஏற்க மாட்டாளா என்றுதான் ஏங்கினாள்.

அரச மாளிகை போன்ற பெரிய வீட்டின் பூந்தோட்ட முகப்பில் நுழைந்து வாயில் பக்கம் நின்ற கார், ஹாரன் செய்து தன் வருகையை அறிவித்தது. சுமதியின் கணவர் பரசுராம் வெளியே



வந்து புன்னகையுடன் நின்றார். சுமதியும் புன்னகையுடன் வண்டியை விட்டு இறங்க இருவரும் உள்ளே சென்றனர். டிரைவர் பொருட்களைக் கொண்டு வைத்துவிட்டு ஷெட்டிற்குப் போய்விட்டான். பரசுராம் அவள் நலம் விசாரித்துவிட்டு மேலே மாடியறைக்குப் போய்விட்டார். சுமதி வந்தவுடன் தன் மகளைப் பார்க்கப் பிரியப்படுவாள். அந்தச் சுமைகளுடன் தன் அறைக்குச் சென்று அழுவாள். இதெல்லாம் அவர் அறிந்ததே. அவர் எதிலும் தலையிடமாட்டார். தானுண்டு, தன்வேலையுண்டு என்று போய் விடுவார்.

இரண்டு பகுதிகளாக இடையே ஒரு கதவின் மூலம் இணைக்கப்பட்ட வீடு அது. அடுத்த பகுதி முழுவதும் ஆர்த்திக்கும் அவள் பெரியம்மா சுபாவுக்கும். அவசியமான நேரத்தில் இணைப்பு வாயில் மூலம் சுபா இந்தப் பகுதிக்கு வருவாள். நினைவு தெரிந்த பிறகு ஆர்த்தி இங்கு வரமாட்டாள். சுமதி பாசம் காரணமாக அந்தப் பகுதிக்குப் போவாள். மனம் நொந்து திரும்புவாள்.

ஆனாலும் தன் தொழில் காற்று பட்டுவிடாமல் ஆர்த்தியை வளர்க்க ஆசைப்பட்டதால் இந்தத் தனிப்பகுதி ஏற்பாட்டினைச் செய்திருந்தாள். அந்தப் பகுதிக்கு பக்கவாட்டில் வாயில் முகப்பு உண்டு. தனக்கும் தன்மகளுக்குமிடையே உள்ள விருப்பு வெறுப்புகள் வெளியே பரவ விருப்பமில்லாததால் சில ஏற்பாடு-களும் செய்திருந்தாள். பணியாட்கள் குறிப்பிட்ட நேரத்தில் வந்து குறிப்பிட்ட பணிகளைச் செய்துவிட்டு அவுட் ஹவுஸுக்குப் போய்விட வேண்டும். எப்பொழுது அழைத்தாலும், அப்பொழுது-தான் வீட்டிற்குள் வரவேண்டும். மற்றபடி சுமதியின் அந்தரங்கம் யாவும் சுபாவுடன் மட்டுமே பகிர்ந்து கொள்ளப்படும்.

ஜன்னல் பக்கம் நின்று இயற்கையை ரசித்த வண்ணம் தன்னை மறந்து நின்றிருந்தாள் ஆர்த்தி. மெல்ல அடுத்த பகுதிக்குச் செல்லும் இணைப்புக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள் சுமதி. ஜன்னலோரம் நிற்கும் மகளை ஆவல் ததும்பப் பார்த்தாள். இவள் என் மகள், என் கருவில் உருவான என் உரிமை என்று பெருமிதவுணர்வு எழுந்து, அடுத்த கணமே கரைந்து

மறைந்தது. இவளுக்கு ஆர்த்தியைக் காண்பதில் உள்ள ஆர்வம் ஆர்த்திக்கு இவளைக் காண்பதில் இல்லை.

நாற்பது வயது என்று சொல்லவே முடியாத இளமைத் தோற்றத்துடன் காணப்படும் சுமதியின் விழியசைவுக்கும், விரலசைவுக்கும் வெளியே ஒரு ரசிகப்படை காத்திருந்தது. ஆனால் ஆர்த்திக்கு அதில் பெருமையொன்றுமில்லை. குழந்தைப் பருவத்திலேயே இவள் சுபாவிடம் வளர்க்க விடப்பட்டாள். சுபா தன்னை பெரியம்மா என்றுதான் இவளுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டாள். நினைவறியாப் பருவத்திலேயே அம்மாவிடம் மிகச் சிறு பொழுதும், பெரியம்மாவிடத்திலேயே பெரும் பொழுதும் வளர்ந்ததால் அம்மாவின் தேவை இருக்கவில்லை. நினைவு தெரிந்தபோதோ சுமதியின் மகள் என்ற நினைவே கசந்தது. சுமதியின் மகள் என்ற நிலையில் வெளியே செல்வது வேதனை தந்தது. எத்தனை விதமான வக்கிரப் பேச்சுகள், பார்வைகள், உள்ளே துடித்துத் துவள ஆரம்பித்தாள்.

எங்குச் சென்றாலும் திரையுலகத் தாரகையின் இளவரசி என்ற பாராட்டு, வரவேற்பு இவளுக்குப் பெருமிதம் ஏற்படவில்லை. மாசற்ற பிஞ்சு மனத்தில் சிறிதுசிறிதாக அம்மாவின்மேல் வெறுப்பு வளரலாயிற்று. சுமதியின் மகள் என்ற கண்ணோட்டமே பிடிக்காது போயிற்று.

பள்ளிக்கூடத்தில் கணக்கு மாஸ்டர் எல்லோர்க்கும் சிங்கம் போன்றவர். இவளிடம் மட்டும் குழைவார். என்ன ஆர்த்தி? அடுத்த வாரம் புதுப்படம் ரிலீஸாமே? மாஸ்டருக்குப் பாஸ் உண்டா? என்பார். அவர்மீது ஆர்த்திக்கு இருந்த மரியாதை உள்ளே உடைந்து விழுந்துவிட்டது. யாரிடமும் அதிகம் ஒட்டாமல் மெல்லச் சிரித்து நகர்ந்து விடுவாள். இவள் பள்ளித்தோழி பாரதி. நடுத்தர வர்க்கத்துப் பெண். படிப்பில் முதல் தரம். அவள் பெற்றோர் அவள் முன்னேற்றத்தில் அளவு கடந்த ஈடுபாட்டுடன் நடப்பதை ஆர்த்தி நுட்பமாய்க் கவனிப்பாள். மிகவும் எளிமை-யானவள் பாரதி. அதே நேரம் எதனாலும் சலனப்படாத அவள் உறுதி, இலக்கு நோக்கியே உள்ள அவள் கவனம் ஆர்த்தியை மிகக் கவர்ந்தது.



பாரதியை அவள் படிப்பிற்காகப் பெரிதும் மதிப்பார்கள். ஆர்த்தி பாரதியுடன் நல்ல நட்புக்கொண்டு படிப்பில் ஆர்வத்துடன் முன்னேறினாலும் அவளுக்கு மற்றவர் தரும் மதிப்பு, பாராட்டு யாவும் திரையுலகத் தாரகை சுமதியின் மகள் என்ற பார்வையிலேயேயிருக்கும். எல்லோரும், எப்போதும் இவளைத் துதிபாடி மகிழும்போது பாரதி மட்டும் அநாவசியமாய், போலியாய் ஒரு வார்த்தையும் பேசமாட்டாள். மாலையில் அவளை அழைத்துப் போக அவள் அம்மா வருவாள். எளிமையும், அழகுமாய் இனிமையாய் இருப்பாள். ஆடம்பரமும், அசிங்கமும் இல்லாமல் அவள் ஆடையணியும் விதம் பாரதியின் தாயிடம் ஆர்த்திக்குப் பெருமதிப்பை ஏற்படுத்தியிருந்தது. மதிய உணவுடன் சில நாள் பாரதியின் தாய் வருவாள். அப்போது பாரதியுடன் ஆர்த்தியும் அவள் தாய் கையால் வாங்கிச் சாப்பிடுவாள். சினிமா நடிகையின் மகள் என்பதையே ஒதுக்கி, இயல்பாக குடும்ப அங்கத்தினராய் ஆர்த்தியை ஏற்று நடப்பார்கள். இவர்களுடன் இருக்கும்போதுதான் ஆர்த்தி மனவுளைச்சலின்றியிருப்பாள். அம்மாவைப் பார்க்கும் ஆண்கள் வழிவதுபோல், பாரதியின் தாயிடம் எந்த ஆணும் நடந்து கொள்வதில்லை. இத்தனைக்கும் பாரதியின் தாய் இயற்கையழகு மிகுந்தவள். அவளுக்குச் சமூகம் தரும் மரியாதை அவள் பண்பிற்கு. ஆனால் தன் அம்மாவிற்குச் சமூகம் தரும் மரியாதை அவள் பண்பிற்கு அன்று. அவள் அழகிற்கு, அசைவிற்கு அவள் சமூகத்தின் பொதுச் சொத்தாய் சாசனம் செய்யப்பட்டு விட்டாளோ? இது ஏனோ ஆர்த்திக்குப் பிடிக்கவில்லை. சுமதியின் பெண்ணாய் ஏன் பிறந்தோமென்று எண்ணத் தொடங்கினாள்.

ஜன்னலோரம் நிற்கும் மகளின் பின்புறம் மெல்ல வந்த சுமதி, ஆர்த்தி! ஆர்த்திக்கண்ணு என்று சின்னக் குரலில் ஆர்வம் பொங்கக் கூறினாள்.

ஆர்த்திக்கு ஆத்திரமாயிருந்தது. இதுவரைத் தான் ரசித்த இயற்கையின்பத்தையெல்லாம் அம்மாவின் குரல் அடித்துக் கொண்டு போய்விட்டதாக உணர்கிறாள்.

மெல்ல ஆர்த்தியின் தோள்மீது மென்மையாகக் கைவைத்து, 'அம்மா உனக்கு என்னவெல்லாம் வாங்கி வந்திருக்கிறேன் பார்', என்று பரிவுடன் கூற,

ஆர்த்தி தன் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் தோள்மீது பதிந்த கையை அழுத்தமாய் விலக்கினாள். சுமதிக்கு மனம் சுட்டது. முன்பே பட்ட காயம் ஆறாத நிலையில் மேலும் வலித்தது. கண்ணீர் வந்தது. தோள்மீது கை வைத்ததற்கே இத்தனை வெறுப்படையும் மகள் அவளைத் தன் பக்கமாய் அணைத்து உச்சிதனை முகரவும், கருவம் ஓங்கி வளரவும் வாய்ப்பேது?

மனம் உடைந்து திரும்பிய சுமதி தன் அறைக்குச் சென்று படுக்கையில் விழுந்து அழுதாள். இந்த அழுகை நடிப்பன்று உண்மை.

ஆர்த்தி தன் படிக்கும் அறைக்குச் சென்று கதவைச் சார்த்திக் கொண்டாள். சிறுவயதில் அவள் வீணைப் பயிற்சிப் பள்ளியில் வீணை பயின்றாள். இவள் வாசிக்கும் திறன் கண்டு பயிற்சி ஆசிரியர் கலாவதி இவளைத் தன் வீட்டிற்கு அழைத்துத் தனிப்பயிற்சி அளித்தாள். பள்ளிவிழாக் கலை நிகழ்ச்சிகளில் ஆர்த்தியின் வீணையிசை கண்டிப்பாக இடம் பெறும். ஆனால் வெளிவிழாக்களுக்குக் கண்டிப்பாக வாசிக்க மறுத்துவிடுவாள். அமைதியில்லாத நேரத்தில் தன்னை அமைதிப்படுத்திக் கொள்ளவே அவள் வீணை வாசிப்பாள்.

சுமதி வேதனையுடன் திரும்பியதைக் கவனித்துக் கொண்டிருந்த சுபா அவள்மீது மிகுந்த இரக்கத்துடன் மெல்ல அவள் அறைக்கதவைத் திறந்து அவள் கட்டிலருகே செய்வதறியாது நின்றாள். இந்தச் சோக நாடகம் இன்று நேற்றா நடக்கிறது? ஆர்த்திக்கு நினைவு தெரிந்த நாளாய் நடக்கிறது.

சுமதியின் அந்தரங்கத் தோழியாகவும் ஆர்த்தியின் பெரியம்மா-வாகவும் இருக்கும் சுபா, இந்தச் சோக நாடகத்தை வெளியுலகம் அறியாது காத்து வந்தாள். இத்தனைக்கும் சுமதியை முறையாக மணந்த பரசுராமுக்குப் பிறந்த மகள்தான் ஆர்த்தி. அவள்



பிறப்பிலோ, வளர்ப்பிலோ குறைபாடு ஏதுமில்லை. ஆனாலும் ஆர்த்திக்குத் தன் அம்மாவைப் பிடிக்கவில்லை. அப்பா அவள் விஷயத்தில் தலையிடுவதில்லை. சுபாதான் அவளுக்கு அம்மா, அப்பா எல்லாம். அம்மாவை அசிங்கமாய் விமர்சிக்கும் சில விமர்சனங்கள் அவளைப் புண்படுத்தின. அவள் அப்பாவைக் கையாலாகாத ஆண் என்று மட்டம் தட்டும் பேச்சையும் அவள் கேட்க நேர்ந்திருக்கிறது. சிறுவயது, சிந்தித்து முடிவுக்கு வரத்தெரியாத பருவம். பாரதியின் பெற்றோர் போல் தான் கௌரவமான பெற்றோரைப் பெறவில்லை என்ற ஏக்கம் உள்ளூர வருத்தியது. பரசுராம் மிகப் பெருந்தன்மை வாய்ந்தவர். அவருக்குப் பிஸினஸ் பெரிது. வெளியூர், வெளிநாடு என்று பெரும்பொழுது செல்பவர்.

'சுமதி! அழுது உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே. ஆர்த்தி சிறுபெண். தானே சிந்தித்து முடிவுக்கு வரமுடியாத பருவம். உன்னை அவள் புரிந்து கொள்ளவில்லை. அவள் தெளியும்போது உன்னை நேசிப்பாள். உன் அன்பு ஒருநாளும் வீண்போகாது' என்று ஆதரவாய்க் கூறினாள் சுபா.

'இல்லை சுபா எனக்கு அந்த நம்பிக்கை போய்விட்டது. எதற்கு இந்தப் பிழைப்பு என்று தோன்றுகிறது. யாருக்காக நான் சம்பாதிக்க வேண்டும்' என்று தேம்பினாள்.

'நீ நிறைய உழைத்துவிட்டாய். பொருளும் சேர்த்துவிட்டாய். இனித் திரையுலகை விட்டுவிடு' என்றாள்.

'எப்படி சுபா விடமுடியும்? எத்தனை படங்களுக்கு ஒப்பந்தம் போட்டிருக்கிறேன். அத்தனையும் நடித்துக் கொடுக்க வேண்டாமா? பணம் போட்டவர்கள், வார்த்தையை நம்பியவர்கள் எல்லோரும் பாதிக்கப்படுவார்கள்' என்று அழுது கொண்டே கூறினாள்.

'சரி! இப்போது இதைப்பற்றிப் பேசவேண்டாம். தானே யாவும் ஒரு நிலைக்கு வரும். ஆர்த்தியை நான் பார்த்துக் கொள்கிறேன். கவலைப்படாதே' என்று மென்மையாக அவள் கையைப் பற்றிய வண்ணம் ஆறுதல் கூறினாள் சுபா.

'சுபா! என் சொந்தச் சகோதரி ஒருத்தி இருந்திருந்தால்கூட இப்படி உதவமாட்டாள். உனக்கென்று ஒரு வாழ்க்கையே

வேண்டாமென்று என்னுடன் இருக்கிறாயே, என் கண்மணியைக் காக்கும் கண்ணே நீதான்' என்று உணர்வு பொங்கக் கூறினாள் சுமதி.

'கடவுளுக்குத்தான் நாமெல்லோரும் கடமைப்பட்டிருக்கிறோம்' என்று சிரித்த வண்ணம் கூறினாள் சுபா.

அதற்குள் சுமதியின் கணவர் வரவே, சுபா தங்கள் பகுதிக்குப் போய்விட்டாள்.

சுபா பிழைப்புக்காக அநாதையாக சுமதியிடம் வந்தாள். அவளுக்குத் திரையுலகில் வாய்ப்புகள் வாங்கித் தரமுடியும். ஆனால் சுபா பிடிவாதமாக மறுத்துவிட்டாள்.

ஆர்த்தியைப் பெற்றெடுத்து தன்வீடு திரும்பும் நேரத்தில் அவளை வளர்க்கும் பொருட்டு ஆண்டவனால் அனுப்பப்பட்டவள் போல் சுபா வந்ததால் தன் குழந்தைக்கு அவளைப் பெரியம்மா-வாக்கிவிட்டாள். சுமதியைவிட ஆறுமாதம் பெரியவள் சுபா. ஆனால் பொறுமையிலும், பண்பிலும் நம்பிக்கையைப் பாதுகாப்பதிலும் அவள் மிகப் பெரியவள்.

ஆர்த்தியின் வளர்ப்பிற்காகவே அடுத்த பகுதி வீடு கட்டப்பட்டு நடுவில் ஒரு கதவால் இணைக்கப்பட்டது. சுபாவிற்கு ஆர்த்தியும் அடுத்த பகுதி வீடுமே உலகம். குழந்தையைக் கண்ணுங் கருத்துமாய் வளர்ப்பதில் அவள் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டாள். ஆர்த்திக்கு நடனம் பயில விருப்பமில்லை. ஆனால் வீணை என்ற இசைக்கருவி அவள் மனதில் ஒப்பற்ற இடம் பிடித்துவிட்டது. ஏதேனும் கவலை, மனவுளைச்சல் என்றால் படிக்கும் அறைக்கதவை மூடிக்கொண்டு உள்ளே வீணையில் ஒன்றிவிடுவாள். இந்தச் சிறுபருவத்தில் இந்தச் செயல் சுமதிக்கும், சுபாவுக்கும் வியப்பளிக்கும். நினைவு தெரிந்தவுடன் அம்மா இருக்கும் அடுத்த பகுதிக்குச் செல்வதை அறவே விட்டுவிட்டாள். ஒரு முறை அப்பகுதிக்குச் சென்று எதையோ தேடப் போனவள், திரையுலகப் பிரமுகர்கள் அம்மாவுடன் அளவுகடந்த உரிமை கொண்டாடியதைக் காணச் சகியாது இந்தப் பகுதிக்கு வந்தவள் தான். அதன் பிறகு அடுத்த பகுதி வீட்டிற்குச் செல்வதை நிறுத்திவிட்டாள். மனதில் அம்மாவுடனும் விலகிவிட்டாள்.



'கண்ணிலான் பெற்றிழந்தான்' என்பது போல் பாசத்தால் சுமதி தவித்தாள்.

'பெரியம்மா! நாம் ஒருநாள் பாரதியின் வீட்டிற்குப் போவோமா?' என்றாள் ஆர்த்தி.

அவள் அடிக்கடி கூறும் செய்திகளிலிருந்து பாரதி என்ற அவள் வகுப்புத் தோழி நல்ல பெண், நல்ல படிப்பாளி, நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவள் என்றெல்லாம் சுபா புரிந்து கொண்டி-ருந்தாள். பிரபல நடிகையின் மகள் சர்வ சாதாரணமாய் அங்கெல்லாம் போய்விட முடியுமா என்ன? கும்பல் கூடும். கூட்டத்தில் சிலர் புகழ்ந்து பேசக்கூடும். பொறாமைக்காரர்கள் வக்கிரமாய்ப் பேசுவார்கள். மெல்லிய மனம் படைத்த ஆர்த்தி புண்படக்கூடுமே என்று அஞ்சினாள்.

'என்ன பெரியம்மா பதிலேயில்லை' என்று சிணுங்கினாள் ஆர்த்தி.

'ஒன்றுமில்லை ஆர்த்தி. நாம் பஸ்ஸிலோ, ஆட்டோவிலோ போகமுடியாது. அந்த இடத்திற்குக் காரில் போனாலோ கூட்டம் கூடிவிடும். அதுதான் யோசிக்கிறேன். பேசாமல் பாரதியை இங்கு வரவழைப்போமா?' என்று நயமாய்க் கூறினாள்.

'போ பெரியம்மா, அவர்கள் இங்கெல்லாம் வரமாட்டார்கள்' என்று மிகுந்த வருத்தத்துடன் கூறினாள்.

'ஏன் ஆர்த்தி? இங்கு நம் வீட்டில் என்ன குறை?' என்றாள் சுபா பதிலுக்கு.

'உடம்பைக் காட்டிப் பிழைக்கும் உன் தங்கைதான் (ஆர்த்தி தன் அம்மாவைச் சினம் காரணமாய் இப்படிக் குறிப்பது வழக்கம்) காரணம்' என்றாள் வெறுப்புடன்.

'அம்மாவிற்கும் மனம் உண்டு என்பதை நீ அடிக்கடி மறந்து விடுகிறாய் ஆர்த்தி' என்று நயமாய்க் கூறினாள்.

'அம்மாவிற்கு ஏது மனம்? மனமிருந்தால் இப்படியொரு வாழ்வைத் தேர்வு செய்திருப்பாளா?' என்றாள் கோபமாக.

'செயலில் ஒன்றும் குறையில்லை ஆர்த்தி. பார்ப்பவர்கள் கண்ணோட்டத்தில்தான் குறையிருக்கிறது' என்றாள் சுபா.

‘பொய் சொல்லாதே பெரியம்மா. பாரதியின் அம்மாவை யாரேனும் தப்பாகப் பேச முடியுமா? அசிங்கமாகப் பார்க்க முடியுமா? அப்படி நடந்தால் அவள் அப்பா அவர்களை அடித்து விடுவார். உன் தங்கை புருஷன் (அப்பா என்று சொல்லப் பிடிக்காது) ஏன் பேசாமலிருக்கிறார்? இவர்கள் மானமில்லாதவர்கள்’ என்றாள் ஆர்த்தி.

‘ஆர்த்தி! நீ குழந்தை. உனக்குத் தெரியாததைப் பற்றித் தவறாகப் பேசக்கூடாது. உன் அம்மா நல்லவள். நடிப்பு அவள் தொழில். அதை அவள் கடமையுணர்வோடுதான் செய்கிறாள். நீதான் அவள் வாழ்க்கை. உன்னை மிகவும் நேசிக்கிறாள்’ என்றாள் சுபா.

‘பாரதியின் அம்மாவும், அப்பாவும் அவளுக்காக எப்படி-யெல்லாம் பாடுபடுகிறார்கள். என் அம்மா அப்படியா? சதா நடிப்பு, விழா என்று யார்யாருடனோ போகிறாள். எனக்குப் பிடிக்கவில்லை. என்னை ஏன் பெற்றெடுத்தாள்?’ என்று எரிச்சலுடன் கூறினாள்.

‘ஆர்த்தி! புரியாமல் பேசாதே. ஒவ்வொரு செயலையும் நேரிடையாகத் தானே செய்வது, பிறரைக் கொண்டு செய்விப்பது என்று இரண்டு நிலைகள் உண்டு. வீட்டின் சொந்தக்காரர் தானேவா வீட்டைக் கட்டுகிறார்? மற்றவர்கள் உதவியால் கட்ட-வில்லையா?’ என்றாள் சுபா.

‘போ, பெரியம்மா உன் நொண்டிச் சமாதானமெல்லாம் எனக்கு வேண்டாம். எனக்குப் பாரதியின் வீட்டிற்குப் போகவேண்டும். அவள் வீட்டாருடன் சந்தோஷமாய் இருக்க வேண்டும்’ என்று பிடிவாதம் செய்தாள்.

‘ஆகட்டும் ஆர்த்தி. நான் ஏற்பாடு செய்கிறேன். இப்போது சந்தோஷமாய்ப் பள்ளிக்கூடம் கிளம்பு’, என்று அவளை உற்சாகப்-படுத்தினாள்.

ஆர்த்திக்குத் தனி கார். அதில் சுபாவே அவளைக் கொண்டுவிட்டு அழைத்து வருவாள். என்றாவது டிரைவர் அழைத்துப் போய் அழைத்து வரும்படி நேர்ந்தால்தான் டிரைவர் அம்மாவின் காரில் அழைத்துப் போவார்.



ஒரு சிறு ரிப்பேருக்காக ஆர்த்தியின் கார் முதல்தினம் ஒர்க்-ஷாப்பில் விடப்பட்டது. இன்னும் வரவில்லை. எனவே இன்று டிரைவர்தான் கொண்டு விடுவார். ஆர்த்திக்கு நல்லதாயிற்று என்று தோன்றியது. பள்ளியில் இறங்கிக் கொண்டதும், டிரைவர் மாலையில் என்னை அழைத்துப் போக நீங்கள் வரவேண்டாம். பெரியம்மா வருவதாய்ச் சொல்லிவிட்டார்கள் என்று கூறி அனுப்பிவிட்டாள்.

ஆர்த்திக்கு உள்ளூர மகிழ்ச்சி. தன்னை அழைத்துப் போக யாரும் வரமாட்டார்கள் என்று கருதிக் கொண்டாள். மாலை பள்ளி முடிந்ததும் பள்ளியின் முகப்பில் விதவிதமான கார்களும், பைக்குகளுமாக வாகன அணிவகுப்பு போன்றிருந்தது. அவரவர் பெற்றோர்கள், வேலையாட்கள் என்று அழைக்க வந்தவர்களுடன் புறப்பட்டனர். ஆர்த்தியும், பாரதியும் பேசிக் கொண்டே முகப்பிற்கு வந்தனர். ‘என்ன ஆர்த்தி உன் பெரியம்மாவைக் காணோம்?’ என்றாள் பாரதி.

‘கார் மைனர் ரிப்பேருக்கு ஒர்க்ஷாப்பிலிருக்கிறது. இன்னும் வந்திருக்காது. டிரைவருக்குப் பழக்கமில்லாததால் வர மறந்திருப்பார்’ என்றாள் இயல்பாக.

‘அப்படியா? என் அம்மா இன்று வரமுடியாது என்று ஆட்டோ அனுப்பியிருக்கிறார். இங்கே தனியே நிற்பதைவிட என்னுடன் என் வீட்டிற்கு வருகிறாயா?’ என்றாள் பாரதி.

இதைத்தானே எதிர்பார்த்தது ஆர்த்தியின் மனம். ‘சரி! பாரதி. உன்னுடன் வந்து விடுகிறேன்’ என்றாள். ‘எதற்கும் ஆபீஸ் ரூமில் போய் பெரியம்மாவிற்கு போன் செய்து விடு. கவலைப்படுவார்கள்’ என்றாள் பாரதி.

அதுவும் சரிதான் என்று ஆபீஸ் ரூம்வரை சென்றுவிட்டு போன் செய்ததாகத் திரும்பி வந்துவிட்டாள். போன் செய்தால் பெரியம்மா உடனே வந்துவிடுவாள் என்று அவளுக்குத் தெரியும். எப்படியோ அவள் விருப்பப்படி அன்று பாரதி வீட்டில் கேம்ப்.

மூச்சுத் திணறல் நின்று சுத்தமான காற்றைச் சுவாசிப்பது போலிருந்தது ஆர்த்திக்கு.

பாரதியின் தாய் அவர்களிருவருக்கும், டிபன், காம்ப்ளான் எல்லாம் கொடுத்தாள். சாப்பிட்டுக் கொண்டே அன்றைய பாடங்களைப் பற்றி பாரதி அம்மாவிடம் கூறினாள். அன்று கணக்கு டெஸ்டில் ஒரு மார்க் குறைந்ததன் காரணத்தை பாரதியின் தாய் அவளுக்கு எடுத்துக்கூறி, இனி அந்தப் பிழை வாராதிருக்க வழியும் கூறினாள். ஆர்த்திக்கு ஆங்கிலத்தில்தான் ஈடுபாடு என்றறிந்து அவளுக்குப் பிடித்த இலக்கிய ரசனையுடன் அவளிடம் பேசினாள். வீட்டின் பின்பக்கம் உள்ள சிறிய பூந்தோட்டத்தில் சிறிது நேரம் உலவியும், விளையாடியும் மகிழ்ந்தனர். இரவு சாப்பாட்டிற்கு ஆர்த்திக்குப் பிடித்த உணவு வகையை பாரதியின் அம்மா ஆர்வத்துடன் தயாரித்தாள்.

சுபாவோ கலக்கமடைந்தாள். காலையில் அவளைப் பள்ளிக்கூடம் அழைத்துச் சென்ற டிரைவர் சுமதியின் டிரைவர் இருவரில் ஒருவர். அவர் இப்போது சுமதியைப் பார்ட்டிக்கு அழைத்துச் செல்லப் போய்விட்டார். ஆர்த்திக்காக சுபா பயன்படுத்தும் கார் இன்னும் ஒர்க்ஷாப்பிலிருந்து வரவில்லை. மூன்றாவதாகப் பயன்படுத்தும் கார் மட்டுமே ஷெட்டிலிருந்தது.

பள்ளிக்கூடத்திற்குப் போன் செய்தால் செய்தி வேண்டாத வகையில் பரவும். அவள் இந்நேரம் அங்கிருந்தால் தனக்குப் போன் செய்திருப்பாள். எதற்கும் ஒரு யூகமாய் காலையில் ஆர்த்தி அடையாளம் சொன்ன பாரதியின் வீட்டிற்குப் போக முடிவு செய்து ஷெட்டிலிருந்த காரை எடுத்துக்கொண்டு ஆர்த்தியைத் தேடக் கிளம்பினாள். சுமதி, ஆர்த்தி சுபாவின் பொறுப்பில் இருப்பதால் அவளைப் பற்றிக் கவலைப்படாதிருந்தாள். இந்நிலையில் தானே பொறுப்பாளி. இதுபற்றித் தெரிந்தால் கூட சுமதி தாங்கமாட்டாள்.

ஆர்த்தி வீட்டை மறந்து, தன்னை மறந்து பாரதி வீட்டாருடன் ஒன்றி சந்தோஷமாயிருந்தாள். பாரதியின் அப்பா அலுவலகத்திலிருந்து வரும்போதே 'பாரதி' என்று அன்புபொங்க அழைத்துக் கொண்டே வந்தார். பின்புறத் தோட்டத்தில் ஆர்த்தியுடன் விளையாடிக் கொண்டிருந்த பாரதி, தன் கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, "ஆர்த்தி உள்ளே போவோமா? இப்பொழுது அப்பா வந்து விடுவார். வரும் போதே 'பாரதி' என்று அழைத்துக் கொண்டே வருவார்" என்று கூறிய வண்ணம் ஆர்த்தியின் கையைப் பற்றிய வண்ணம் உள்ளே வந்தாள்.



'பாரதி! பள்ளிக்கூடம் போய்வந்தாயா? இன்று வகுப்பெல்லாம் எப்படியிருந்தது?' என்றார்.

'போய் வந்தேனப்பா. வழக்கம் போல், கணக்குத்தான் கொஞ்சம் பிணக்கு செய்தது' என்றாள் பாரதி.

'பாரதி என்று பெயர் வைத்ததும், கணக்கு பிணக்கு என்று கவிதை பாடுகிறாய் பார்!' என்று செல்லமாய் பரிகசித்தார்.

ஆர்த்தி அவர்கள் பேச்சை, அன்பை ரசித்தாள். மனம் சிறிது ஏங்கியது.

ஆர்த்தியின் முகத்தைப் பார்த்தவுடன் குழந்தைகளின் மன இயல்புணர்ந்த பாரதியின் தந்தை பேச்சை மாற்றினார். ஆங்கிலத்தில் சில கவிதை வரிகளைக் கூறி, அதன் ஆசிரியர் பெயர் என்ன என்று கேட்க ஆர்த்தி முந்திக் கொண்டாள். அவள் கவிதை ஈடுபாட்டைப் பாராட்டி பிரபல எழுத்தாளரின் கவிதை நூலொன்றைப் பரிசாகக் கொடுத்துத் தன் மகளின் தோழி இத்தனை ஆர்வமிக்க ஆங்கிலக் கவிதை ரசிகையாயிருப்பது தனக்குப் பெருமிதமாகவுள்ளது என்று பாராட்டினார்.

கலகலப்பாய் பேசிச் சிரித்த வண்ணம் எல்லோரும் உணவு கொண்டிருந்தனர்.

வாயிலில் காரை நிறுத்திவிட்டு, சுபா உள் வராந்தாவரை வந்து கதவை மெல்லத் தட்டினாள். கண்ணாடிக் கதவு வழியே ஆர்த்தி சந்தோஷமாய்ச் சாப்பிடுவது தெரிந்தது.

பாரதியின் அம்மா எழுந்து வந்து இடக்கையால் கதவுத் தாழ்ப்பாளை விலக்கி, 'வாங்க பெரியம்மா. சாரி இடக்கையால் திறப்பதற்கு மன்னிக்க வேண்டும்' என்றாள்.

சுபாவைப் பார்த்ததும் ஆர்த்திக்கு மறந்து போன வீடு, சொல்லாமல் வந்தது யாவும் நினைவுக்கு வர, தன் மனத்தில் எழும் கலவரத்தை மறைக்க முயற்சி செய்தாள்.

சுபாவை எல்லோரும் வரவேற்று உபசரித்தனர். சுபா வெகு இயல்பாய் நடந்து கொண்டாள். 'எங்கள் ஆர்த்திக்கு நல்ல நட்பு கிடைத்ததில் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி. வீட்டில் எப்போதும்

பாரதி புராணம்தான்' என்று கூற, போ பெரியம்மா என்று ஆர்த்தி சிணுங்கினாள்.

'போகலாமா ஆர்த்தி?' என்று சுபா புறப்படத் தயாரானாள். தான் சொல்லாமல் வந்தது குறித்து பெரியம்மா ஏதும் கவலை தெரிவிப்பாளோ என்றஞ்சிய ஆர்த்தி நிம்மதியடைந்தாள்.

ஒருவாறு விடைபெற்றுக் காரில் ஏறிப் புறப்பட்டனர். சுபாவே காரை ஓட்டி வந்திருந்தாள்.

தான் பெரியம்மாவிடம் சொல்லாமலே இப்படித் தோழி வீட்டிற்கு வந்தது தவறு என்ற உணர்வே இப்போதுதான் தலையெடுத்தது. சுபா அமைதியாகக் காரோட்டினாள். மெல்ல அவள் பக்கம் நகர்ந்து மெல்லிய தன் கைகளை உரிமையுடன் அவள் தோளில் பதிக்க, சுபாவிற்குச் சிரிப்பு வந்தது. அவள் தன் பிழைக்கு வருந்துகிறாள் எனப் புரிந்தது. வலக்கையை ஸ்டியரிங்கில் வைத்துக் கொண்டு இடக்கையால் அவளைத் தன் பக்கம் சாய்த்துக் கொண்டு பார்வையை பாதையில் செலுத்திக் கவனமாய் ஓட்டினாள்.

'கோபமா பெரியம்மா?' என்று குழந்தையாய்க் கொஞ்சினாள்.

இல்லை என்பதுபோல் தலையசைத்துப் புன்னகைத்தாள் சுபா. 'என்னை எப்படிக் கண்டுபிடித்தாய்?' என்றாள் ஆர்த்தி. 'இரவெல்லாம் நீ பாடிய பாரதி புராணத்தை வைத்துதான் கண்டுபிடித்தேன்' என்றாள் சுபா.

குழந்தை கிடைத்துவிட்ட நிம்மதி சுபாவிற்கு. சொல்லாமல் வந்த பிழையின் பாரம், மன்னிக்கப்பட்டதால் கரைந்த நிம்மதி ஆர்த்திக்கு. இருவரும் இலேசாயினர். சூழல் சுகமாயிற்று.

சுபா அமைதியாய்க் காரைச் செலுத்த, அவள் தோள்மீது பூப்போல் சாய்ந்து, அன்றைய தோழி வீட்டு நிகழ்ச்சிகளை அசைபோட்ட வண்ணம் ஆர்த்தி தனக்குள் மகிழ்வாய் இருக்க வீடு திரும்பினர்.

சுமதி அன்றிரவு வீடு திரும்ப நேரமானது. இரவோ, பகலோ எப்போது வீட்டிற்குள் நுழைந்தாலும் ஆர்த்தி வசிக்கும் அடுத்த பகுதியை ஒரு கண்ணோட்டம் விடுவது அவளியல்பு. மகள்மீது



எழும் பாசம் காரணமாகக் கால்கள் அந்தப் பகுதிக்குச் செல்லும் கதவின் பக்கம் செல்லும். அன்று பாரதியின் வீட்டிற்குச் சென்று வந்த உற்சாகத்தில் ஆர்த்தி நெடுநேரம் படித்துக் கொண்டிருந்தாள். மணி பதினொன்றைத் தாண்டவே, 'ஆர்த்தி! படித்தது போதும் வா. படுத்துக்கொள், தூக்கம் இல்லையென்றால் நாளை வகுப்பில் தூங்கிவிடுவாய்' என்று அக்கறையுடன், உரிமையாக சுபா அழைத்தாள்.

'இதோ வந்துவிட்டேன் பெரியம்மா' என்ற ஆர்த்தியின் குரல் சுமதிக்குத் தேனாய் இனிக்கிறது. இந்த அந்நியோந்நியம் தனக்கு அவளிடம் இல்லையே என்று ஏக்கமாயிருந்தது.

'சுபா! இன்னும் ஆர்த்தி தூங்கவில்லையா?' என்று கேட்டுக்-கொண்டே கதவைத் திறந்தாள் சுமதி, இவள் வருவது தெரிந்ததும் புத்தகத்தை வைத்துவிட்டு ஓடிப்போய்க் கட்டிலில் படுத்து தலை முதல் கால்வரை மூடிக்கொண்டாள். என்னிடம் வந்துவிடாதே என்று சொல்லாமற் சொல்கிறாள் ஆர்த்தி என்பது சுமதிக்குப் புரிந்தது.

ஆர்த்தியின் இனிய குரலைக்கேட்டு, சென்று வந்த அலுப்பெல்லாம் மறந்துவிட்டாள். இப்போது அவள் எதிர்ப்பு சொல்லொணா வேதனையளித்தது. வாடிய மனத்துடன் திரும்பினாள்.

ஒவ்வொரு முறையும் இவள் இப்படிப் பாதிக்கப்படும் போதெல்லாம் சுபா தானே அந்த வேதனையை அனுபவிப்பாள். ஒரு வேளை ஆர்த்திக்குத் தன் அரவணைப்பு இல்லாதிருந்தால் சுமதிக்கு அந்தப் பாசம் கிடைத்திருக்குமோ? தானே அதற்குத் தடையோ? என்று கலங்குவாள்.

'சுமதி!' என்று ஆதரவாக அழைத்தவண்ணம் அவளருகில் வந்து முதுகில் ஆதரவாய்த் தடவிக்கொடுத்தாள். அவளைப் பற்றிக் கொண்டு தேம்பி அழுதாள் சுமதி. மனச்சுமை தீர அழட்டும் என்பதுபோல் காத்திருந்தாள் சுமதி.

'சுபா! என் ஏக்கம் புரிகிறதா உனக்கு?' என்றாள் சுமதி.

'புரிகிறது சுமதி. அவள் குழந்தை. அவள் மனத்தில் ஓரடைப்பு இருக்கிறது. அதை மெல்லக் கரைக்க வேண்டும். பிறகு எல்லாம்

சரியாகிவிடும். பிறகு உன்னிடத்தில் அவள் சகஜமாகிவிடுவாள். நீ அவளைத் தேடிவருவது போல் அவள் உன்னைத் தேடி வருவாள். அது போகட்டும். நீ உன் தொழிலைத் தெய்வமாக மதிக்கிறாய். அவள் எப்படி இதற்கு எதிர்ப்பாக இருக்கிறாள் என்று புரியவில்லை. நீ ஏன் இந்தத் துறைக்கு வந்தாய்? விருப்பத்தாலா? அல்லது யாரேனும் கட்டாயப்படுத்தி வந்தாயா?'

'சுபா! ஆர்த்தி பிறந்திருந்த அந்த நேரம் நீ என்னைத் தேடி வந்தாயல்லவா? ஏன் வந்தாய்?' என்று சுமதி அவளை எதிர்க்கேள்வி கேட்டாள்.

'வாழ வழி தேடி வந்தேன். நீ மட்டும் எனக்கு ஆதரவு தந்திராவிட்டால் என்ன ஆகியிருப்பேனோ?' என்றாள் சுபா.

நானும் அதுபோல் வாழ வழி புரியாமல் நின்றேன். உனக்குக் கிடைத்த ஆதரவு எனக்குக் கிடைக்கவில்லையே. சிறுவயதில் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்றுச் சிறந்த திறமையிருந்தது. ஆதரவில்லாத அந்நிலையில் இந்தத் தொழிலில் வலிய வாய்ப்பு வந்தது. முதலில் பெருமையாக இருந்தது. பணமும், புகழும் சேரச் சேர தொல்லைகளும் துயரங்களும் சேர்ந்தது. ஒரு நல்ல பாதுகாப்புத் தேவைப்பட்டது. புற அழகையும், பணத்தையும், பகட்டையும் விரும்பும் கூட்டத்தில் என்னுள்ளத்தை மட்டும் நேசிக்கும் பரசுராம் நட்பு கிடைத்தது. என் உண்மையான மனநிலையைச் சொல்லி முறையிட்டேன். நான் சந்தித்த அவலங்களை ஒன்று விடாது, ஒளியாது மறையாது கூறினேன். எனக்கென்று, என் ஜீவனை மட்டும் நேசிப்பதற்கென்று, எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாத தூய துணையாக அவர் எனக்குக் கிடைத்தார்.

தொடரும்...

✧✧✧

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

## காணாமற்போன பொருள்

ஞாபக மறதியுள்ளவர்க்கு அடிக்கடி பொருட்கள் காணாமற்போகும். பிரார்த்தனை செய்யத் தோன்றாது. தேடுவார்கள். தேடுவதை நிறுத்த முடியாது. தேடுவதை நிறுத்தி பிரார்த்தனை செய்ய முடிவு செய்தால் அப்பிரார்த்தனை எழுமுன் பொருள் கிடைக்கும். பொருள் கிடைக்கப் பிரார்த்தனை செய்தால் பொருள் தொலைந்தபடியிருக்கும். பிரார்த்தனையால் கிடைக்கும். தொலைவது குறையும். பொருட்கள் கிடைக்கப் பிரார்த்திக்காமல், பொருள் தொலையாமலிருக்கப் பிரார்த்தனை செய்வது நல்லது. அதைவிட பொருள் தொலையும் குணம் — மறதி — ஒழுங்கின்மை — போகப் பிரார்த்திப்பது மேல். அவற்றை விட — “பொருள் தொலைந்து விட்டது. நான் தேடப் போவதில்லை. பிரார்த்திக்கப் போவதில்லை, மறதி போகவும் பிரார்த்திக்க மாட்டேன், பொருளையும், காரணத்தையும், குணத்தையும் மறந்து அன்னையை மட்டும் நினைக்கப் போகிறேன்” என்றவுடன் தொலைந்த பொருள் கிடைக்கும். பல வருடங்களுக்குமுன் தொலைந்தது தொடர்ந்து கிடைக்கும். அதன்பின் பொருளே தொலையாது. புத்தகங்களைக் கடன் என வாங்கித் திருப்பிக் கொடுக்காமல் ஏராளமான புத்தகங்களைச் சேர்த்தவரை நாடி அவர் வீட்டிற்குப் போய் அவர் கேட்ட புத்தகத்தைக் கொடுப்பது அறிவில்லாத செயல். அதைச் செய்த அன்பர் பெற்ற பதில், “நான் புத்தகம் பெறவில்லையே” என்பது. 30 ஆண்டுகட்குப்பின் அன்பர் இந்தச் சூட்சுமத்தை அறிந்த அன்று புத்தகத்தைத் திருடி மறைத்தவர் வீடு தேடி வந்து புத்தகத்தைக் கொடுத்தார். 30 ஆண்டிற்குப்பின் அறிவு வந்த அதே நேரம் புத்தகம் வந்தது. அறிவு வந்தால் அன்னை வருவார்.

## அர்த்தமுள்ள எண்ணங்கள்

- அறிவு வந்தால் அன்னை வருவார்.
- செய்ய வேண்டியதை முக்கால் பங்கு செய்தாலும், முழுமையான நேரம் பலன் வரும்.
- சிறிது செய்தாலும் அதற்குரிய பலன் உண்டு.
- காணிக்கைக்கு அளவில்லை, அவசியம் உண்டு.
- காரியம் முடிய காணிக்கை அவசியம். மிகச் சிறிய அளவும் பலன் தரும். 10 இலட்சம் காரியம் முடிய ரூ. 1 காணிக்கையும் போதும்.
- காணிக்கை காரியத்தைப் பூர்த்தி செய்யும்.
- மேலும்தரும் காணிக்கை சேவைக்குப் போகும். அன்னையின் சேவைக்குக் காணிக்கைப் பயன்பட்டால், நம் வாழ்வு அருளின் சேவையாகப் பூர்த்தியாகும்.
- காரியம் முடிய காணிக்கை; வாழ்க்கை மலர சேவை.
- நல்லெண்ணம் வந்தால் அன்னை வருவார்.
- உள்ளம் மலர்ந்தால் உன்னைத் தேடி அன்னை வருவார்.
- ஒரு பொறாமை உணர்வை விலக்கினால், உலகம் முழுவதும் அன்னை தெரிவார்.
- பிறர் குறை தெரியாவிட்டால் அன்னைக்கு நீ இருப்பது தெரியும்.
- அன்னை வாராத நேரமில்லை. அன்பர் விலகாத நேரமில்லை.
- வற்புறுத்தி அன்னை வந்தால், அன்பர் அன்னையை வற்புறுத்தி விலக்குவார்.